The Good Pastor

நல்ல ஆயன்

“நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக் கிடையைச் சேராத வேறுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின் கீழ் ஒரே ஆட்டுக் கிடை உண்டாகும்.” (அரு. 10:11-16.)

புத்தகம் 16. | ஜனவரி 1918. | இலக்கம் 1.

THE NEW YEAR.

புது வருடம்.

நேற்றோடு 1917-ம் ஆண்டு முடிந்தது. அதனோடு அதன் 12 மாதங்களும், 52 வாரங்களும், 365 நாட்களும் புகைபோல் மறைந்து போயின. சர்வேசுரன் நமக்கு தயையாய்க் கொடுத்துள்ள ஆயுள் காலத்தில் அவ்வொரு வருஷமும் சிட்டுப்போல் பறந்து போயிற்று. மேலும் நாம் அவ்வருஷத்தில் சுகித்தனுபவித்த இன்ப சுகங்களும் அதனோடு ஒழிந்துவிட்டன. அநேகருடைய உள்ளத்தில் ஒருக்கால் அந்த இன்ப சுகங்களின் பலனாகிய மனோ வாதனையும் மனோ சங்கடமுமாத்திரம் இன்னும் இருக்கக்கூடும். ஆம், காலம் நிலையற்றது. அதுபோலவே அதன் இன்ப சுகங்களுமாம். ஆனால் நம்முடைய வாழ்நாட்களில் நம்மை விட்டுப்பிரியாமல் நம்மோடு சாஸ்வதமா யிருப்பவை நம்முடைய பாவ புண்யங்களும் அவைகளுக்குரிய தண்டனை அல்லது சம்பாவனையுமேயல்லவா? ஆனபடியால் கடந்துபோன 1917-ம் ஆண்டும் அதன் இன்ப சுகங்களும் இனி வரப்போகிறதுமில்லை, நாம் அவைகளைக் காணப்போவதுமில்லை. ஆனால் நாம் அந்த ஆண்டில் செய்த பாவ புண்யங்கள் மாத்திரம் அவைகளுக்குரிய தண்டனை அல்லது சம்பாவனையைப் பெற்றுக்கொள்ள சீவியத்தின் புத்தகத்தில் வரையப்பெற்றிருக்கின்றன. ஓர் வியாபாரியானவன், ஒவ்வொரு வருஷக் கடைசியிலும், தான் அவ்வருஷத்தில் செய்த வியாபாரத்தில் நஷ்டமென்ன லாபமென்னவென்று தன் கணக்குப் புத்தகங்களைப் பார்ப்பானல்லவோ? பார்த்து லாபம் கிடைத்திருக்குமாயின், அந்த லாபத்தை பன்மடங்கு பெருக்கவும், அல்லது, நஷ்டம் வந்துற்றவிடத்து அந் நஷ்டத்தைப் பரிகரித்து இனியாகிலும் லாபத்தையடையவும் வேண்டிய வழி வகைகளைத் தேடிச் செய்வானன்றோ? அதுபோலவே, ஆத்தும ரட்சண்யத்தின்மட்டில் உண்மையாகவே அக்கரைகொள்ளும் ஒவ்வொருவரும் செய்யவேண்டியதாகிறது. நமது மனச்சாட்சியை சோதித்துப்பார்த்து, பாவம் அதிகஞ் செய்திருப்போமானால், அதற்குப் பரிகாரந் தேடவேண்டும்; புண்ணியம் அதிகம் செய்திருப்போமாகில், அதற்காகச் சர்வேசுரனுக்கு நன்றியறிந்து தோத்திரஞ்

செய்து, இனிமேலும் புண்ணியத்தில் நிலைநிற்க வேண்டிய வரப்பிரசாதத்தை யவரிடம் மன்றாடி யடையவேண்டுமன்றோ? ஆனபடியாலல்லவா கிறீஸ்துவர்களான நாம் பிரதி வருஷக் கடைசியிலும் அந்த வருஷத்திற் கட்டிக்கொண்ட பாவங்களுக்காக துக்க மனஸ்தாபப்படவும், இனி அப்பேர்ப்பட்ட பாவங்களைக் கட்டிக்கொள்ளாமலிருக்க தேவானுக்கிரகத்தைக் கேட்கவும், அவ் வருஷம் முழுதும் நாம் சர்வேசுரனிடமிருந்து பெற்றுக்கொண்ட பல நன்மைகளுக்காக அவருக்கு நன்றியறிந்த தோத்திரஞ் செலுத்தவும் யோக்கியமாய் வருஷத்தின் கடைசி தினத்தை ஒரு விசேஷ தினமாக அனுசரித்து வருகிறோம்?

இதோ! இன்றைக்கு புது வருஷமாகிய 1918-ம் ஆண்டு பிறந்திருக்கிறது. இந்த வருஷப்பிறப்புநாள் ஊரெங்கும் ஓர் பெருநாளாகக் கொண்டாடப்படுவது வழக்கம். ஆகவே, அங்கங்கே சிறப்புக் கொண்டாட்டங்களும், அலங்கார ஆரவாரங்களும், விநோத வேடிக்கைகளும் மிக விஸ்தாரமாய் நடைபெறும். ஜனங்கள் ஒருவருக் கொருவர் தபால் மார்க்கமாயும் தந்திமூலியமாயும், வாய்மொழியாயும் சுபசோபனங்கள் கூறிக்கொள்வார்கள். உபசரிப்பு உபசரணைகளும், விருந்து வரிசைகளும், காலட்சேபங்களும் வெகு குதூகலமாய் நடக்கும். இவ்வாறு இவ்வளவு சிறப்பாயும் பிரபல்யமாயும் வருஷப்பிறப்பு கொண்டாடப்படுவதேன்? "நன்றாய்த் தொடங்கப்பட்ட காரியம் அரைவாசியேனும் சித்திபெறும்" என்னும் ஆங்கிலப் பழமொழிப்படி, இன்று தொடங்கியுள்ள வருஷம் எல்லோருக்கும் பாக்கியகரமான வருஷமா யிருக்கவேண்டுமென்று கோரப்படுவதினாலேயாம். தங்களுக்கு யாதோர் துன்ப சங்கடம் வந்து நேராமல் இப்பிரபஞ்ச நன்மைகளே யெல்லாங் குறையறப்பெற்று மங்களகரமாய் இவ்வருஷத்திற் சீவிக்க ஆசிப்பதே அநேகருக்குள்ள அபிலாஷையாகும். ஆயினும், வேண்டும் வேண்டாமென்றாலும் இவ்வருஷமும் அதின் இன்ப சுகங்களோடு சென்றவருஷத்தைப்போல கடந்துபோகும். இப்படியே ஒவ்வொரு வருஷமும் ஒன்றுக்குப் பின் ஒன்றாய்ஓடி ஒழிந்துபோக கடைசியாய் மெய்யான புது வருஷமாகிய நித்தியம் பிறக்கும். இந்த நித்தியமாகிய புது வருஷமோ என்றும் ஒழியாது, என்றைக்கும் மறையாது, எப்போதைக்கும் நீடித்திருக்கும். நித்தியத்தைப்பற்றி நாம் கவனிக்கத்தக்கவைகள் நம்முடைய பாவ புண்ணியங்களே யன்றி பிறிதென்ன? அல்லது அவைகளுக்குரிய தண்டனை, சம்பாவனைகளே யன்றி வேறியாது? அப்படியென்றால், தொடங்கியுள்ள வருஷம் அழிந்துபோகும் இன்ப சுகங்களைச் சுகிக்கும் வருஷமாயிராமல் பரலோக வாழ்வுக்குரிய அழியாத இன்பத்தைத் தரும் நம்முடைய ஆத்தும இரட்சண்யத்தைக் கவனிக்கும் வருஷமா யிருக்க அக்கரைகொள்ள வேண்டியதல்லவா? நம்முடைய ஒழுங்கற்ற சீவியத்தைத் திருத்திப் புதுப்பித்துக்கொண்டு புது மனுஷராய்ச் சீவிக்க உண்மையில் இது ஓர் புது வருஷமா யிருக்கவேண்டியதல்லவா? நம்முடைய துர்க்குணங்களை வெறுத்துத்தள்ளி, புண்ணியங்களைச் செய்யும் வருஷமாய் இவ் வருஷ மிருக்கவேண்டியதல்லவா? ஆம், புண்ணிய சீவியத்தினால் இவ்வருஷம் நம்முடைய நித்திய பேரின்ப பாக்கியத்துக்கு உரித்தான வருஷமாயிருந்தாலன்றி மற்றப்படி அதை பாக்கியகரமான வருஷமாய்க் கருதப்படுவதற்கு ஞாயமில்லை.

நற்கனிகளைக் கொடாத மரம் எப்படி உபயோகமற்றதோ, அப்படியே புண்ணியக்கிரிகைகளை விளைவியாத வருஷமும் பிரயோஜனமற்றதாகுமன்றோ? ஆனபடியால் நாம் ஒவ்வொருவரும் பிரதி வருஷமும் பலன் கொடுக்கும் ஒரு நல்ல மரத்தைப்போல் புண்யக்கிரிகைகளைச் செய்யவேணுமென்று சர்வேசுரன் விரும்புகிறார். ஆயினும் நமக்குள் எத்தனையோ பெயர் தங்கள் ஆயுள்காலத்தின் எத்தனையோ வருஷங்களை பாவ வழியிற் செலவழித்து தங்களுடைய ஆத்துமத்துக்குக் கேட்டை வருவித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களுக்கு லூக்காஸ் சுவிசேஷம் 13-ம் அதிகாரத்திற் சொல்லப்பட்டிருக்கிற அத்திமரத்தின் உவமை ஓர் நல்ல படிப்பினையா யிருக்கும். அந்த உவமையாவது: "ஒரு குடியானவனுடைய திராட்சத் தோட்டத்தில் ஒரு அத்திமரம் நாட்டப்

பட்டிருந்தது. அந்தக் குடியானவன் அதனிடத்தில் வந்து கனியைப் பறிக்கப் பார்த்தபோது அஃதொன்றும் அகப்படாமையால். அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ மூன்று வருஷமாய் நானிந்த அ.த்திமரத்திற் கனியைத் தேடி வருகிறேன். ஆயினும் ஒன்றேனுங் கண்டதில்லை. ஆகையாலிதை வெட்டிப்போடு, இன்னும் நிலத்தி லிடங்கொண்டிருப்பானேனென்று சொல்ல, தோட்டக்காரன் மறுமொழியாக: ஐயா! நான் சுற்றிலுங் கொத்தி எருப்போடுமளவும் இன்னும் இந்த வருஷமட்டு மிருக்கட்டும். ஒருவேளை கனி கொடுக்கும், கொடுக்காவிட்டால், இனியதை வெட்டிப்போடுவீர் என்றான்" என்பதே.

திராட்சத் தோட்டமாகிய திருச்சபையிலுள்ள ஒவ்வொரு கிறீஸ்துவனும் ஒவ்வொரு அத்திமரத்திற்கொப்பா யிருக்கிறான். அத்திமரமாகிய இவனுக்கு தோட்டக்காரனைப்போல் நமதாண்டவரான சேசுநாதசுவாமியின் பிரதிநிதி, பரிசுத்த பாப்பானவரும் அவரிடமாயிருக்கிற மேற்றிராணிமார்கள் குருக்களும், தங்களுடைய புத்திப்போதங்களினாலும் தாங்கள் நிறைவேற்றும் பச்சாத்தாபம், நற்கருணை முதலிய தேவத்திரவிய அநுமானங்களினாலும் ஆத்தும போஷணையைக்கொடுத்து வருகிறார்கள். ஆனால் குடியானவனாகிய சர்வேசுரன் பாவியாகிய கிறீஸ்துவனை நோக்கி "உன்னிடத்தில் இவ்வளவு காலமாய்க் கனியைத்தேடுகிறேன், ஆயினும் ஒன்றேனுங் கண்டதில்லை" என்று முறையிடுகிறார். ஆம், சர்வேசுரன் அநேக கிறீஸ்துவர்களை அவர்களுடைய பாவாக்கிரமங்களைப்பற்றி உடனே நித்திய நரகத்தில் தள்ளி சுட்டெரிப்பது நியாயமாயினும், அவர் அப்படிச் செய்யாமல் அவர்கள் பேரில் தயை காண்பித்து, இனியாகிலும் மனந் திரும்பார்களாவெனப் பொறுமையுடன் காத்துக்கொண்டிருக்கிறார். மேற்படி உவமையிற் சொல்லப்பட்ட அத்திமரத்தை வெட்ட ஒரு வருஷங்கெடு கொடுக்கப்பட்டதுபோல, அநேகருடைய மனந் திரும்புதலுக்காக இப்புது வருஷம் ஒரு கெடுவருஷமாயிருக்கலாம். அல்லது இவ்வருஷமே அநேகருக்கு அவர்களுடைய ஜீவிய காலத்தின் கடைசி வருஷமாயு மிருக்கக் கூடும். ஆனதுபற்றி, நாமெல்லோரும் நம்முடைய இரட்சண்ணிய அலுவலின்மட்டில் இவ்வருஷம் கண்ணுங் கருத்துமா யிருப்போமாக. இதுவரையிலும் நாம் அதற்காக எடுத்துக்கொண்ட முபற்சி, பிரயாசைகளை விட அதிகமா யெடுத்துக்கொண்டு, அர்ச். சின்னப்பர் சொல்லியிருக்கிறபடி "பயத்தோடும், நடுக்கத்தோடும் பாடுபட்டு" வருவோமாக. நம்முடைய ஜீவியம் பழுதுள்ள ஜீவியமா யிருக்குமாகில், அதை இவ்வருஷத்தில் செவ்வையாக்கிக்கொண்டு, சர்வேசுரனுடைய சமுகத்திலும் மனிதர்களுடைய சமுகத்திலும் புது மனிதர்களாய் ஒழுகுவோமாக.

மேலும், நம்முடைய "நல்ல ஆயன்" சந்தாதாரர்களுக்கும், அதன் அபிவிருத்தியை விரும்பி அதை ஆதரிக்க நன்கொடை கொடுப்போருக்கும், அதற்கு விஷப தானஞ்செய்வோருக்கும், இன்னும் வேறுவிதமாய் அதற்கு உதவி ஒத்தாசை புரிவோருக்கும் இப்புது வருஷம் பல புண்ணியங்களால் நிறைந்த பாக்கியகரமான வருஷமாயிருக்கக் கோருகிறோம். இந்த நமது கோரிக்கையை நம்மாண்டவரான நல்லாயன் அன்பாய் ஆசீர்வதிக்குமாறு வழக்கம்போல் வருஷப்பிறப்பாகிய இன்று திவ்யபூசை செய்து ஒப்புக்கொடுப்போம்.

நீ பூரணப் பொருளாகிய தெய்வத்தினுள்ளே புகுந்து உல்லாசிக்க வேணுமானால், ஒரு காரியத்திலாகிலும் ஆசை வையாதே.

பரம ஞானத்தில் பிரவேசம் பண்ணி அவரோடு வாழவேணுமானால், உன்னாத்தும சரீரத் தத்துவங்களாகிய உள்ளிந்திரியங்கள் வெளியிந்திரியங்கள் எல்லாம் அவரிடத்தில் சார்ந்து சுவறிப் போகக்கடவது.

ஆனந்த பூர்த்தியாகிய சர்வேஸ்வரனை நீயனுபவிக்க வேணுமானால் பூமியில் ஒன்றையும் அனுபோகம்பண்ண நினையாதே.

பரிபூரண ஆனந்தமாகிய பரம தேவனுடைய பாதாரவிந்தம் உனக் ககப்படவேணுமானால் பற்றுகள் அற்று ஒரு காரியத்தையும் சிந்தை செய்யா திருப்பாயாக.

(அர்ச். சிலுவை அருளப்பர்.)

THE WEDDING BANQUET.

கலியாண விருந்து.

(மத்தேயு 22-ம் அதிகாரம்.)

நம்முடைய கர்த்தராகிய சேசுக்கிறிஸ்துநாதர் ஒரு நாள் ஜெருசலேமாநகரில் பிரசங்கிக்கையில், பரிசேயரும், சதுசேயரும் அவரை நோக்கி "நீங்கள் பிரசங்கிக்கின்ற வேதம் எத்தன்மையானதென்று" வினவினார்கள். இதற்கு பதிலாக ஆண்டவர் திருவுளம்பற்றினதாவது :—

"பரலோக இராஜ்ஜியம் தன் மகனுக்கு கலியாணஞ்செய்த இராசனுக்கு ஒப்பாகும். எவ்வாறெனில், அந்த அரசன் தன்னாளுகைக்குட்பட்ட பிரபுக்களையும், சிறந்த உத்தியோகஸ்தர்களையும் கலியாணத்துக் கழைக்க தன் ஊழியக்காரரை யனுப்பினான். ஊழியக்காரர் அரசனின் கட்டளைப்படி வீடு வீடாய்ப்போய் வணக்கமாய்க் கலியாணத்துக்கழைத்தார்கள். அழைக்கப்பட்டவர்களோவென்றால் போக மனமில்லாமலிருந்துவிட்டார்கள்.

ஊழியக்காரர் அரண்மனைக்குத் திரும்பி வந்து, நடந்த சங்கதியை அரசனுக்குத் தெரிவித்தார்கள். அரசன் அதைக் கேள்வியுற்று மனவருத்தமடைந்து வேறு சில ஊழியக்காரரை யழைத்து "என் விருந்து ஆயத்தமாயிற்று. அரண்மனை யலங்கரிக்கப்பட்டது. கொழுமையாய் வளர்த்த ஜெந்துக்கள் அடிக்கப்பட்டிருக்கின்றன. வெவ்வேறு வகையான உணவு பதார்த்த முதலியவை முஸ்திப்பாயிருக்கின்றன. அரசன் உங்கள் வருகைக்கு ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான் என்று முதலில் அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள்" என்று கட்டளையிட்டு, அவர்களை அனுப்பினான். ஊழியக்காரர் அரசனின் கட்டளையின்படி வீடு வீடாய்ச் சென்று வணக்கத்துடன் கலியாணத்துக் கழைத்தார்கள்.

அப்போது அழைக்கப்பட்டவர்களுள் சிலர் ஊழியக்காரரை அவமதித்து, அலட்சியம்பண்ணி, தம் கிராமத்துக்கும் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்களோவென்றால் அழைத்தவர்களை வலியப்பிடித்து அவமானப்படுத்தி நன்றாய் அடித்து, கல்லால் எறிந்து, இரக்கமில்லாமல் கொன்றுபோட்டார்கள். அரசன் நடந்த வரலாற்றைக் கேள்வியுற்று, தன் போர்வீரரை யனுப்பி அந்தக் கொலைப்பாதகரை அழைத்து, அவர்களுடைய பட்டணத்தைச் சுட்டெரித்து சாம்பலாக்கிவிட்டான். பிறகு மற்ற ஊழியக்காரரை யழைத்து "கலியாணத்துக்கு எல்லாம் முஸ்திப்பாகத்தான் இருக்கின்றன. ஆனால், அழைக்கப்பட்டவர்கள் அபாத்திரவானானார்கள். ஆதலால் நீங்கள் எல்லாப்பக்கங்களிலும் சென்று, பெரிய வீதிகளிலும் சந்துகளிலும் போகிறவர்களையும், மாளிகைகளிலும் கூரை வீடுகளிலும் வசிக்கின்றவர்களையும் கலியாணத்துக்கு அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று உத்தரவளித்து அனுப்பிவிட்டான்.

அவர்கள் எல்லாப் பக்கங்களிலும் தனித்தனி பிரிந்துபோய், எதிர்ப்பட்ட நல்லவர்கள் பொல்லாதவர்கள் ஆகிய எல்லோரையும் கூட்டிக்கொண்டுவந்தார்கள். விருந்தினர்கள் கலியாண மனையில் நிறைந்திருந்தார்கள். பந்தியில் அமர்ந்திருந்தவர்களைப் பார்க்க அரசன் உள்ளே வந்தான். பிரவேசித்து சுற்றிப் பார்க்கையில், விருந்தினருள் கலியாண வஸ்திரமில்லாமல் அமர்ந்திருந்த ஒருவனைக் கண்டு, அவனிடம் சென்று "சினேகிதா, கலியாண வஸ்திரமில்லாமல் நீ இங்கேவர எப்படித் துணிந்தாய்?" என்று கேட்க, அவனோ பதில் சொல்லாமல் மௌனம் சாதித்தான். உடனே அரசனுக்குக் கோபம் உண்டாகி, ஊழியக்காரரை யழைத்து "இவனுடைய கைகால்களைக் கட்டி, புறத்தில் இருளிலே தள்ளுங்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் இருக்கும்" என்றான் என்பதே.

தன் மகனுக்குக் கலியாணம் செய்யக் கருத்துகொண்ட அரசன் இங்கு பிதாவாகிய சர்வேசுரன். மணமகன் சுதனாகிய சர்வேசுரனானவர். மணமகள் மனுக்குலமாம். மணம் புரிதலாவது, ஆதி மனிதன் செய்த பாவத்தினால் கடவுளுக்கு விரோதப்பட்டு, முக்தியை இழந்து நரக வேதனைக்குள்ளான மனிதர்களை மீண்டும் பரம்பொருளுடன் ஐக்கியப்படுத்தி, கடைத்தேற்றி இரட்சித்தலாகும்.

இதன் பொருட்டாகவே வீடாகிய மோட்சத்தை விட்டுக் காடாகிய இந்த உலகத்தில் மாசில்லாத கன்னிமரியாயின் வாயிலாய்த்

தோன்றினுர் ஆண்டவர். இந்தத் திருமணத்துக்குரிய மாளிகை "ஆண்டவர் அருளிச்செய்த ஞான போதகத்தினலும், புரிந்த அதிசயங் கொண்ட அற்புதங்களாலும், கற்பித்த திவ்விய சட்டங்களாலும் ஸ்தாபித்த திருச்சபையாகும்."

முதன் முறை யழைக்கப்பட்டவர்கள் யூத ஜனங்களாவார்கள்.

இவர்களை முதல்முறை கலியாணத்துக்கு அழைத்தவர்கள், ஆண்டவர் உயிரோடிருக்கும் போதே யூதர்களுக்குச் சத்திய வேதத்தைப் போதித்த அப்போஸ்தலர்களும் சீஷர்களுமாவார்கள். அழைத்தலுக் கமைந்து கலியாண வீட்டுக்குப்போய் அதில் பிரவேசித்தலாவது: "அப்போஸ்தலர்கள், சீஷர்கள் ஆகிய இவர்களின் போதனையை விசுவாசத்தினல் ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானத்தின் வழியாய்த் திருச்சபையில் சேருதலாகும்.

கலியாண விருந்தை யருந்திக் களித்திருத்தல் "திருச்சபையில் குவித்திருக்கும் சுபாவத்துக்கு மேலான பரம நன்கொடைகளாகிற தேவவரப்பிரசாதங்களைப் பெற்றுச் சந்தோஷித்தலாகும்."

போக மனமில்லாமலிருந்தது. "அப்போஸ்தலர்களும், சீஷர்களும் போதிக்க, யூதர்கள் விசுவாசம் கொள்ளாம லிருந்ததாகும்."

ஆனல், சகல ஜாதி ஜனங்களிலிருந்தும் தெரிந்தெடுத்துத் தமக்கு உகந்த மக்களாய் ஏற்றுக்கொண்டு, அத்தனை நூற்றுண்டுகளாய்த் தாய்போல் பாதுகாத்து வந்த யூதகுலத்தை, அப்போஸ்தலர்கள் முதல் முறை போதித்தபோதே விசுவசியாததினல் தள்ளிவிட கடவுளுக்கு மனம் எழவில்லை. பிள்ளை தாயை மறுதலித்த மாத்திரத்தில் தாயும் பிள்ளையை மறுதலிப்பாளோ? தேடாதவழி யெல்லாம் தேடியும், கொள்ளாத உபாயமெல்லாம் கொண்டும், பிள்ளையை நன்னெறியில் கொண்டுவர வருந்துவாளன்றே.?

"ஒரு தாயானவள் தான் ஈன்றெடுத்த பிள்ளையை ஒருக்கால் மறந்தபோதிலும் நான் உங்களை மறக்கமாட்டேனென்றும், கோழி தன் குஞ்சுகளை காக்கிற வண்ணம், நான் உங்களை சகல இடையூறுகளினின்றுங் காத்து இரட்சிக்க ஆவல் கொண்டிருக்கிறே"னென்றும் திருவுளம் பற்றினவர், தமக்கு உகந்த மக்களாகிய யூதர்களை எவ்வகையிலாகிலும் மனம் திருப்ப முயன்றுர்.

அரசன் ஊழியக்காரரை இரண்டாம் முறை யனுப்பியது "ஆண்டவர் மரித்து உயிர்த்தெழுந்தருளி மோட்சாரோகணமான பிறகு இஸ்பிரீத்துசாந்துவானவர் அவரோகணமாகி வரவே, (Descent) பிதாவாகிய சர்வேசுரன் அப்போஸ்தலர்களையும், சீஷர்களையும் யூதர்களுக்கு மீளவும் பிரசங்கிக்க ஆஞ்ஞாபித்ததாகும்."

விருந்து ஆயத்தமாயிற்று. அரண்மனை யலங்கரிக்கப்பட்டது, கொழுமையாய் வளர்த்த ஜெந்துக்கள் அடிக்கப்பட்டிருக்கின்றன. வெவ்வேறு வகையான பதார்த்த முதலியவை முஸ்திப்பாயின, அரசன் உங்களுடைய வருகைக்கு எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறுன் என்றழைத்தது: "அப்போஸ்தலர்களும் சீஷர்களும் யூதர்களை நோக்கி, சகல ஜாதி ஜனங்களிலிருந்துந் தெரிந்தெடுக்கப்பட்டு கடவுளுக்கு உகந்த மக்களாயிருக்கும் யூதர்களே! நீங்கள் இதுவரையிலும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த காலம் வந்துவிட்டது. கடவுளின் ஏவுதலினல், தீர்க்கதரிசிகளும், மகாத்துமாக்களும் பிதாப் பிதாக்களும் உங்களுக்கு வாக்களித்த ஞான சுபாவத்துக்கு மேலான நன்மைகள் யாவும் சம்பூரணமாய் ஆயத்தம் செய்யப்பட்டிருக்கின்றன. உங்களுடைய பாவ விமோசனத்துக்காக, ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர் தம்மைத்தாமே தகனப்பலியாய்ப் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார். பூர்வகாலத்தில் கொடுங்கோலரசனகிய பரவோன் (Pharoah) அடிமையிலிருந்து தப்பியதுபோல், பரவோனைப் பார்க்கிலும் ஆயிர மடங்கு கொடூரமான பசாசின் அடிமைத்தனத்திலிருந்து ஆண்டவர் சிந்திய இரத்தத்தால் தப்பிப்பிழைக்க நேர்ந்தது. எஜிப்த்து நாட்டைவிட்டு வாக்களிக்கப்பட்ட தேனும் பாலுஞ்சொரியும் பலஸ்தீன (Palestine) நாட்டை யடைகிறவரையிலும், கொடிய பாலைவனத்தில் நாற்பது வருஷகாலமாய் நெருப்பில் சமைக்கப்படாத மேலான சிறந்த உணவாகிய மன்னவை (Manna) அருந்தினவர்களே! வாக்களிக்கப்பட்ட பரமானந்தத்தை சம்பூரணமாய் கொண்டிருக்கும் ஞான பலஸ்தீன நாடாகிய மோட்சத்தை யடைகிறவரையிலும், காடாகிய, பாழான சகல துன்பதுரிதங்களுக்கும் வாசஸ்தலமான இந்த உலகத்தில் புசிக்க மனேவாக்குக்கு அடங்காத எல்லா நன்மைகளும் சங்க்ஷேபமாய்ப் பெற்றிருக்கும் அமிர்த ஞான மன்னவாகிய நற்கருணை உங்களுக்குப் பக்குவம் செய்யப்பட்டிருக்கின்றது.

நரகத்துக்கு வலிய இழுக்கின்ற விசாலமான வழியை முழுதும் விட்டகலவும், மோட்சத்துக்குச் செல்லுகின்ற நெருக்கமான பாதையில் நடக்கவும் வேண்டிய சாதனங்களாகும் தேவத்திரவிய அநுமானங்கள் திருச்சபையில் அமைந்திருக்கின்றன. நீங்கள் விசுவசித்து ஞானஸ்நானம் பெறவேண்டியதென்று கடவுள் ஆவல் கொண்டிருக்கிறார்'' என்றுரைத்துப் பல வருஷங்களாகப் போதித்து யூதர்களுக்குப் பிரசங்கித்ததாகும்.

''ஊழியக்காரரை அலட்சியம்பண்ணி கிராமத்துக்கும், வியாபாரத்துக்கும் போனது'': யூதர்கள் அப்போஸ்தலர்கள் செய்யும் போதகத்தைப் புறக்கணித்துச் சிற்றின்பமே பொருளாகக்கொண்டு உலக வாழ்விலேயே ஆழ்ந்திருந்து, மண்ணாசை, பொன்னாசை பெண்ணாசையாகிய இந்த மும்மலங்களிலேயே மனத்தை முழுதுஞ் செலுத்தியதாகும். ''ஊழியக்காரரைப் பிடித்து அவமதித்துக்கொன்று போட்டது'': அந்த பொல்லாத பாதகர்கள் கிறீஸ்துவேத போதகத்தை இகழ்ந்து தூற்றித் தூஷணித்து சிறைப்படுத்தியும், கல்லால் எறிந்தும், (St. Stephen), உயர்ந்த சிகரங்களிலிருந்து அடியில் தள்ளியும் (St. James), அன்னமாகாரமின்றி வருத்தியும் இன்னும் பற்பல வகைகளில் உபத்திரவப்படுத்தினதாகும்.

அரசன் கோபமுற்றுத் தன் இராணுவத்தையனுப்பி அந்தக் கொலைப்பாதகரைச் சங்கரித்து: அவர்களுடைய பட்டணத்தை சுட்டெரித்தது, ''தேவ துரோகிகளான அந்த யூதர்களைச் செவ்வையாய்த் தண்டிக்கக் கடவுள் உரோமை (Rome) நகரச் சேனைகளை பலஸ்தீனுவுக்கு அனுப்பி, அவர்களைக்கொண்டு, அந்த நாட்டிலுள்ள பட்டணங்களையும் கோட்டைகளையும் பிடித்துக் கடைசியில் இராஜதானியான எருசலேம் நகருக்கே முற்றுகைப்போட்டு, குடிகள் அன்ன ஆகாரமின்றி வருந்தச்செய்து, முடிவில் உட்புகுந்து தேவாலயத்தை எரித்துவிட்டும், குடிகளில் பலரைக் (10,000,00) கொன்றும், பலரை (90,0000) அடிமைகளாக விற்றுப்போட்டும் அவர்களுடைய பட்டணத்தைத் தரையோடாக்கிவிட்டதுமாகும்.''

''அரசன் ஊழியக்காரனைப் பார்த்து கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களோ அபாத்திரவான்கள். ஆகையால் வழி சந்துகளிலே போய், நீங்கள் காண்கிற யாவரையும் கலியாண விருந்துக்கு அழைத்துக் கொண்டு வாருங்கள்'' என்று மொழிந்தது: கடவுள் அப்போஸ்தலர்களுக்கு ''இரட்சணியமடைகிறதற்கு வேண்டிய வழிபாடுகள் யாவும் திட்டம் செய்யப்பட்டிருக்கின்றன. யூதர்களோவென்றால் இந்த வழிப்பாடுகளை கைக்கொண்டு கடைத்தேற அபாத்திரரானார்கள். ஆதலால் நீங்கள் எட்டுத்திக்குகளிலும் சென்று, சத்தியவேதத்தை எல்லா வருணத்தாருக்கும், எவ்வித அந்தஸ்திலிருக்கின்ற மனிதர்களுக்கும் பிரசங்கிக்கக்கடவீர்கள்'' என்று ஆஞ்ஞாபித்ததாகும்.

ஊழியக்காரர் புறப்பட்டு வீதிகள்தோறும் போய், எதிர்ப்பட்ட நல்லவர்கள் பொல்லாதவர்கள் எல்லாரையுங் கூட்டிக்கொண்டு வந்தது: ''யூதர்கள் மனம் திரும்பாமலிருக்க அப்போஸ்தலர்கள் எல்லா திசைகளிலும் சென்று; மெய்யான கடவுளை வணங்கி வழிப்பட்டவர்களும், அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்தியிருந்தவர்களுமாகிய எல்லோருக்கும் சத்திய வேதத்தைப் போதித்து, ஞானதீட்சை கொடுத்து, திருச்யில் சேர்த்த திவ்விய செயலாகும்.

கலியாணசாலை பந்தியமர்ந்தவர்களால் நிறைந்திருந்ததாவது: ''திருச்சபை, நாற்றிசையிலும் பரவி திரளான ஜனங்களை தன் மக்களாகக்கொண்டிருத்தல்.''

பந்தியமர்ந்தவர்களைப் பார்க்கும்படி அரசன் உள்ளே பிரவேசித்தது: ''கடவுள் திருச்சபையோடு இறுதிக்காலமட்டும் இருந்து, அதனை அளவுகடந்த அன்போடு பாதுகாத்து வருதலாகும்.''

பட்டாடையணிந்து பற்பல விலையுயர்ந்த ஆபரணங்களைப் பூண்டு, நறுமணம் கமழ்கின்ற சந்தனக் கலவை பூசிக்கொண்டு பந்தியில் அமர்ந்திருந்தவர்கள்: ''தேவ இஷ்டப்பிரசாதத்திலிருந்து கற்பு, தரித்திரம், கீழ்ப்படிதல், பொறுமை, தாழ்ச்சி, உதாரத்துவமாகிய இந்த புண்ணியங்களை அநுசரித்து, சாங்கோபாங்கத்தைக் கைக்கொண்டவர்கள். கலியாண வஸ்திரமின்றி அழுக்கான கந்தைத்துணியை போர்த்திக்கொண்டு வந்திருந்தவன்'': ஞானஸ்நானத்தைப் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்து, கிறீஸ்துவனென்னும் சிறப்பானபேர் கொண்டிருந்தும், அந்தப்பேருக்குத்தக்க நடக்கையில்லாமல் பாவச்சேற்றிலேயே புரளுகின்றவன்.

சினேகிதா! கலியாண வஸ்திரமின்றி நீ இங்கே எப்படி பிரவேசித்தாய் என்றது: "கடவுள் தாமே நேராக ஞான வெளிச்சம் உள்ளத்தில் தந்தாயினும், குருப்பிரசாதிகள், பாவியின் நண்பர்கள், வேண்டியவர்கள் ஆகிய இவர்களைக்கொண்டாயினும், நேரிடும் வியாதி, சாவு, பொருள் நஷ்டம், அபகீர்த்தி மனத் துயரமாகிய இவ்வித சம்பவங்கள் மூலமாயாயினும், பயத்தை உண்டாக்கியோ, அன்பு பாராட்டியோ பாவி மனம் திரும்பும்படி வற்புறுத்தித் தூண்டி நற்புத்தி புகட்டுவதாகும்.

அரசன் வினவ, கலியாண வஸ்திரமில்லாமலிருந்தவன், மௌனஞ் சாதித்தது: "கடவுள் பாவியின் மனம் திரும்ப, எவ்வளவு கஷ்டப்பட்டும், பாவியானவன் நற்போதனையை சற்றேனும் செவியில் ஏற்காமல் பாவத்தையே நாடித் தன் மனத்தை மேன்மேலும் கல்லாக்கிக் கொள்ளுகிறதாம்."

அப்போது அரசன் பணிவிடைக்காரரை நோக்கி, இவனுடைய கைகால்களைக் கட்டி இவனை வெளியே இருளிலே தள்ளுங்கள், என்றது: "கடவுள் தேவதூதர்களை நோக்கி இந்தத் துரோகியைப் பிடித்து நரகக்குழியில் தள்ளுங்கள் என்று கட்டளை யிடுகிறதாகும். அவ்விடத்திலிருக்கும் அழுகையும் பற்கடிப்பும், அகோர நரகவேதனையைக் குறிக்கும்.

நேசர்களே! இந்த உவமானத்திலிருந்து நீங்கள் ஆராயவேண்டிய விஷயம் என்னவென்றால்: "எப்போதும் கலியாண ஆடையாகிற தேவ இஷ்டப்பிரசாதத்தோடிருக்க வேண்டியதுதான். தேவ இஷ்டப்பிரசாதமே கடவுள் மதிக்கும் விலையுயர்ந்த பொருளாகும்."

விருந்தினர் வெவ்வேறான ஸ்திதி நிலைமையிலுள்ளவர்கள். அவர்களில் பலர் வித்துவான்கள். பலர் படிப்பில்லாதவர்கள். செல்வமுடையவர் பலர். ஏழைகள் பலர். பெருமை சிறப்பு செல்வாக்குடையவர் பலர். அவை இல்லாதவர் பலர். பிரபுக்கள் பலர். சாமானிய ஜனங்கள் பலர். உயர்ந்த குலத்தோர் பலர். தாழ்ந்த குலத்தோர் பலர். ஆடவர் அரிவையர், பெரியோர் சிறியோர் ஆகிய இவர்கள் பந்தியில் அமர்ந்திருந்தனர். ஆனால் உவமானத்தில் கூறியிருக்கும் அரசன் எதைப்பற்றி விசாரித்தான்? விருந்தினரின் நிலைமை அந்தஸ்தைக் குறித்தோ? "சினேகிதா கலியாண வஸ்திரமில்லாமல் நீ இங்கே எப்படி பிரவேசித்தாய்" என்று மாத்திரம் வினவினான். கலியாண வஸ்திரமணிந்தவர்களெல்லோரும் தமக்குள் ஜாதி விஷயத்திலும் பண விஷயத்திலும், படிப்பு விஷயத்திலும் உத்தியோக விஷயத்திலும் என்ன பேதமிருந்தும் கலியாண வீட்டிலிருக்க உரிமைகொண்டவர்கள்.

ஞான விஷயத்திலும் அவ்வாறேயாகும். நண்பர்களே! நீங்கள் சகல கலைக்கியானங்களைக் கற்றுணர்ந்து பூரண பண்டிதராயு மிருக்கலாம். நிரட்சரகுட்சியாயுமிருக்கலாம். பொன்னை மலை போலக்குவித்துக் குபேரனாயு மிருக்கலாம். அல்லது ஓடெடுத்து வீதிகள்தோறும் மழையிலும் வெயிலிலும் அலையும் யாசகராவு மிருக்கலாம்.

வீரக்கழலணிந்து மாற்றரசரைவென்று ஜகத்துக்கேகாதிபதியாயு மிருக்கலாம். அல்லது ஒரு சுதந்திரமு மில்லாத அடிமையாயு மிருக்கலாம். துறவியாயு மிருக்கலாம். கிருகஸ்தனாயு மிருக்கலாம். சகல சுகபோகங்களை யனுபவிக்கிற ஸ்திதியிலு மிருக்கலாம். அல்லது கூழுக்கே வழியில்லாமலு மிருக்கலாம். எல்லோரும் சிறப்பித்து புகழும் நிலைமையிலு மிருக்கலாம். அல்லது எல்லோரும் இகழுங் கடைப்பட்டவனாயு மிருக்கலாம். மிகவும் உயர்ந்த குலத்தில் உதித்தவனாயு மிருக்கலாம். அல்லது மிகவும் தாழ்ந்த புலையன் முதலிய ஜாதியானாகவு மிருக்கலாம். ஐரோப்பா கண்டத்தவனாயு மிருக்கலாம். ஆப்பிரிக்கா கண்டத்தவனாயு மிருக்கலாம். ஆனால், நம்முடைய ஆத்துமத்துக்கு தலைவரான ஞான அரசர் இந்த இலௌகீக ஸ்திதி நிலைமைகளைப்பற்றிக் கிஞ்சித்தேனும் கவனிப்பார் அல்லர். அணுவேனும் மதிப்பார் அல்லர். கடவுளுக்கு முன்பாக இரண்டே வகுப்பான ஜாதிமாத்திர முண்டு. மிகவும் உயர்ந்த ஒரு விதத்தில் கடவுளோடே சமப்படுத்தும் ஜாதியாகிய, கலியாண ஆடை எனும் தேவ இஷ்டப்பிரசாதத்திலிருக்கின்றவர்களுடைய ஜாதியும், மிகவும் தாழ்ந்த இழிவான நரகப்பேய் கூட்டங்களோடே ஒன்றாக்கும் குலமாகிய தீர்க்கந்த சாவானபாவத்தி லிருக்கின்றவர்களின் ஜாதியுமாம்.

பொதுத் தீர்வை நாளில் உயர்குலத்தோர் எல்லோரும், நியாயாதிபதியின் வலது பக்கத்திலும், இழிகுலத்தோர் எல்லோரும் நியாயாதிபதியின் இடது பக்கத்திலும் நிற்பார்கள். செத்த பிறகு உயர்குலத்தோன் சதாகாலமும் நிலை

பெற்று நடக்கிற கலியாண விருந்து வீடாகிய மோட்சத்தை யடைவான். இழிகுலத்தோன் அழுகைக்கும் பற்கடிப்புக்கும் இருப்பிடமான எந்நாளிலும் அழியாத சிறையாகிய நரகத்தில் தள்ளுண்டு கட்டப்படுவான்.

ஆதலால், சிநேகிதர்களே! இவ்வுலகத்தில் எற்கெனவே, உங்களை உயர்குலத்தாரோடு சேர்க்கும் அந்த ஞான கலியாண ஆடையாகிய தேவ இஷ்டப்பிரசாதத்தோ டிருந்தால், அந்த ஆடை அழுக்குப்பட்டுக் கிழிந்து அழியாத வண்ணம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டியது. அந்த ஞான ஆடை இல்லாவிடில் உபமானத்தில் சொல்லப்பட்டவன்போல் மௌனமாயிராமல், கடவுள் அருள் ஏவுதலுக்கு இணங்கி, மனஸ்தாபமாகிய விலைகொடுத்து, குருக்களாகிறவர்த்தகரிடத்தில் பாவசங்கீர்த்தன வழியாய் அதை வாங்கிக் கொள்ள வேண்டியது.

உலக வாழ்வு பெருமை செல்வம் யாவும் மின்னல்போல் மறையும். நீர்க்குமிழிபோல் அழியும். கண்பஞ்சடையும் இறுதிகாலத்தில் இவை யாவும் அவலமாய்விடும். அந்த ஞான ஆடையோ சதாகாலத்திலும் நிலைபெற்றிருக்கும். இறுதிகாலத்தில் உங்களுக்கு ஏகதுணையாயிருக்கும். ஆதலால் நிலைப்பயனற்றதை வெறுத்திகழ்ந்து, நிலை பயன்கொண்டதை விரும்பி வாழ்வீர்காளக.

L. S.

SISTER MARY OF THE DIVINE HEART.

திவ்ய இருதயத்தின் மரியம்மாள்.

(முன் தொடர்ச்சி)

சிலுவையை தம் சிம்மாசனமாகவும், முள்முடியை தம் கிரீடமாகவும் கொண்ட நமது திவ்ய அரசனுடைய பணிவிடையில் மரி தன்னைக் கையளித்தாள். ஊழியன் தன் எஜமானிலும் பெரியவன் அல்லவென்றும், தமக்குச் சீஷர்களாக விரும்புகிறவர்கள், தங்கள் சிலுவையைச் சுமந்து தம்மைப் பின் செல்லவேண்டுமென்றும் நமதாண்டவர் திருவுளம்பற்றினாரன்றோ? ஆதலால் மரி துரோஸ்ட் சகோதரி பலவகை துன்ப வருத்தங்களை அநுபவித்தது நமக்கு ஆச்சரியமாய்த் தோன்றுது. மரி மடத்தில் சேர்ந்த சில மாதங்களுக்குள்ளாக தன் அழைப்பைப்பற்றி பல சந்தேகங்களுக்குள்ளானாள். அதில் தவறிப்போனதாக எண்ணி கலவரப்பட்டு பயந்தாள். இதுவே அவள் பட்ட மகா கொடிய துன்பங்களுக்குள் ஒன்றென்னலாம். ஆனால் இது விஷயத்திலாவது, மற்றெந்த விஷயத்திலாவது அவள் எவ்வளவுதான் மனதிலும், சரீரத்திலும் துன்ப வாதனைகளை யனுபவித்தாலும், மடத்தின் ஒழுங்கில் எள்ளளவும் பிறழாமல் நடந்தாள். தன்னுடைய சிரேஷ்டர்களின் கட்டளைகளையும், ஆலோசனைகளையும், விருப்பங்களையும் சிரமேற்கொண்டு, அவைகளை உத்தம நேர்மையுடன் பின்பற்றுவாள்.

மடத்தின் "பாலர்களின்" மட்டில் அவள் காட்டிய அன்பும் பட்சமும் கனிகரமும் அதிசயப்படத்தக்கதாம். அவர்கள் மத்தியில் உழைக்கப் பெரிதும் பிரியப்படுவாள். ஆத்தும இரட்சண்ணியத்துக்காகத் துன்ப வாதனை அநுபவிக்க அபேக்ஷைகொண்ட இவளுக்கு எந்தக் கஷ்டமும் பரித்தியாகமும் ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. இந்த நிர்ப்பாக்கிய "பாலர்களை" நடத்துவதில் மெத்த அநுகூலமடைந்தாள். நவகன்னியாஸ்திரீயாயிருக்கும்போதே மற்றவர்களை ஆண்டு நடத்த அபூர்வமான சக்தியுடையவளாகக் காணப்பட்டாள். மரி எழுதுவதாவது: "நான் சபையின் உடையைப் பெற்றபின் நமதாண்டவர் எனக்கு அளித்த முதல் வரம் என்னவென்றால், பச்சாத்தாபப் பாலர்களின் மத்தியில் இருக்கும்படியாகச் செய்ததேயாம். இப்பேர்ப்பட்ட தயவுக்கு நான் முற்றும் அபாத்திரமுள்ளவளென் றுணர்ந்தேன். ஆனால் இதை எனது திவ்ய பத்தாவின் விசேஷித்த கிருபையென்று எண்ணினேன். பாவிகளின் மனந் திரும்புதலாகிய இவ் வேலை அவருடைய இருதயத்துக்கு எவ்வளவோ பிரியமானது. இதில் நான் பங்கடையவேணுமென்று எற்கனவே அவர் விரும்பினார். இப்பாலர்களை நடத்த யாதொரு கஷ்டமும் எனக்கு வராதபடி அவர் தயவு கூர்ந்தார். அவர்களில் மிகவும் நிர்ப்பாக்கியர், கடையானவர்கள் மட்டில்தான் நான் பெரிதும் பட்சமும் அன்பும் காண்பிக்கலானேன். தவறிப்போன செம்மறி ஆட்டை திரும்பவும் நேர் வழியில்

கொண்டுவந்து சேர்ப்பதையும், சேசுவின் இருதயத்தின் சாந்தத்தையும், கிருபையையும் கண்டு பாவிப்பதையும்விட மிகவும் ஆறுதலான காரியம் வேறென்ன? நான் இந்த எளிய ஆத்துமங்களை அவரிடம் எப்போதும் ஒப்படைத்துவந்தேன். அவைகளில் ஒன்று முரட்டுத்தன முள்ளதாய்த் தோன்றினுல், நான் அவருடைய இருதயத்தின் பத்தினியென்றும், அவ்ர் அந்த ஆத்துமத்தை எனக்குக் கொடுக்க கடமைப்பட்டவரென்றும், நமதாண்டவருக்கு நினைப்பூட்டினேன். இப்பாலர்களை நடத்துவதில் நான் அடைந்த அனுகூலமெல்லாம் சேசுவின் திரு இருதயத்தின் தயவேயாகும். சில தடவையில் காரியங்கள் அசாத்தியமாய்த் தோன்றினபோது, அவரே எல்லா கஷ்டத்தையும் நீக்கிவிடுவார். சில சமயங்களில் அவர் அதிகமான ஜெபத்தையும், பரித்தியாகத்தையும், கஸ்தி பாடுகளையும் நம்மிடமிருந்து கேட்டபோதிலும், நாம் ஒரு ஆத்துமத்தைக் குறித்து அவரை மன்றாடுவோமாகில், நமதாண்டவர் அதனை நமக்கு மறுக்கமாட்டார். ஒரு பாவி மனந்திரும்புதல், எவ்வளவு அசாத்தியமாய்த் தோன்றுமோ, அவ்வளவு சேசுவின் திரு இருதயத்தின் மட்டில், உன்னுடைய நம்பிக்கையும் பூரணமாய் இருத்தல்வேண்டும்; நீ அதிக வருத்தத்தையும், சலிப்பையும் எதிர் பார்க்க வேண்டும். ஆனுல் நீ தைரியத்தை இழக்கலாகாது. பாவி மனந்திரும்பினுப்போல் காணப்பட்டு திரும்பவும் பாவத்தில் விழுந்தாலுமே உன் தைரியத்தைச் சற்றும் விடலாகாது. சேசுவின் இருதயம்கடைசியில் மனக்கடினப்பட்டுப்போன இருதயத்தின்மேல் வெற்றிகொள்ளும், அதின் பலவீனத்தை ஸ்திரப்படுத்தும். ஆனுல் நீ உன்னுடைய நம்பிக்கையால் நமதாண்டவரைப் பரிசுத்தமாய் பலவந்தம்பண்ணி பஞ்சரித்துக் கேட்கவேண்டும்.

இவ்வார்த்தைகளால் மரி துரோஸ்ட சகோதரி தன் பச்சாத்தாப பாலர்களின் ஆத்தும இரட்சண்ணியத்தை எவ்வித ஆவலோடு தேடினுளென்றும், அவர்களுக்காக அவள் பட்ட துன்பங்களும், செய்த செபதபங்களும், முயற்சிகளும் எவ்வளவென்றும் எத்தன்மைத்தென்றும் நன்கு விளங்குகின்றது. நவசன்னியாச கால முழுவதிலும் மரி சகோதரி உத்தம கீழ்ப்படிதலின் கண்ணுடியாய் விளங்கினுள். தன் சிரேஷ்டர்கள் மட்டில் அவளுடைய நடத்தை எப்போதும் அன்பும் பட்சமும், வணக்கமும் மரியாதையுமுள்ளதா யிருந்தது. தன் சபையின் ஒழுங்கு குறித்த சொற்பமான சரீர ஒறுத்தல் முயற்சிகளை முதலாய்ச் செய்ய அவளுக்கு போதுமான திரேகபலமில்லாததினுல் மெத்த வருத்தமடைவாள். ஆகிலும் தன்னுல் கூடுமானவரையில் மற்ற சகோதரிகளைப் போல் எல்லாவற்றிலும் நடந்துகொள்ள பெரிதும் முயன்முள். சலியாமல், சோம்பாமல் உற்சாகத்தோடு உழைப்பாள். அவ்வேலை எவ்வளவு தான் கஷ்டமாயிருந்தாலும், தாழ்ந்ததாயிருந்தாலும் மனப்பூர்வமாய் அதைச் செய்ய பின்வாங்காள். சமையல் பாத்திரங்களைத் துலக்குவதும், விளக்குமாற்றுல் மடத்தி னறைகளைப் பெருக்குவதும், கோடைகாலத்தின் வெயிலில் வெளிவயல்களின் விளைவை அறுத்து சேர்ப்பதும் இவை முதலான பல வேலைகளைச் செய்ய பின்னிடையாள். இவைகள் தன் பலத்துக்கு மேற்பட்டதா இல்லையா வென்று சிந்தித்தவள் அல்ல. சில காலத்துக்குமுன் டார்பீல்டில் அவளுடைய பங்கு குருவானவர்: "மோட்சத்தை நோக்கிப் பார், எல்லாம் உன்னுல் கூடும்" என்று அவளுக்கு உரைத்த வசனம் அவள் நடத்தைக்கு வழிகாட்டியாய் இருந்தது.

1891 வருஷம் ஜனவரி மாதம் 29-ம் தேதி நவசந்நியாசத்தின் 2 வருஷ சோதனை காலம் முடிந்தவுடன் திவ்ய இருதயத்தின்மரி சகோதரி மன்ஸ்டர் மேற்றிராணியாரின் முன்னிலையில் தன் கடைசி வார்த்தைப்பாடுகளை செலுத்தினுள். அந்தப் பூஜீதமான வேளையில் தன் சபையின் வழக்கத்தை அநுசரித்து தன் திவ்ய பத்தாவுக்கு அவள் எழுதி சமர்ப்பித்த விண்ணப்ப கடிதமானது அவள் தனக்கும் தன் சுய நாட்டங்களுக்கும் மரிக்கவும், சிலுவையில் அறையுண்ட சேசுவின் துன்ப ஜீவியத்தை சீவிக்கவும் எம்மாத்திரம் ஆவலும் திடமும் கொண்டிருந்தாளென்று நமக்கு எண்பிக்கின்றது.

அவ்விண்ணப்பத்தில் அவள் கோரிய வரங்கள் பின்வருமாறு:

"1. சர்வேசுரனுக்கு விரோதமாய்—விசேஷமாய் என் வார்த்தைப்பாடுகளின் விஷயத்தில் மனம் பொருந்திய குற்றத்தைக் கட்டிக்கொள்ளாம லிருக்கவும், கடைசிபரியந்தம் என்னழைப்பில் நிலைமையாய் இருக்கவும் வரம்.

"2. சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காகவும், ஆத்துமங்களின் இரட்சண்ணியத்திற்காகவும், என்னுத்துமத்தின் அர்ச்சிப்புக்காகவும்

சாங்கோபாங்கத்துக்காகவும் சர்வேசுரனுடைய சித்தத்துக்கு இசைந்து நடக்க வரம்.

"3. உள்ளாந்தர சீவியத்தின் வரம், வெளி வேலைகளின் மத்தியிலும் சர்வேசுரனோடு ஓயாமல் ஐக்கியமாயிருக்க வரம்.

"4. ஒருபோதும் என் சுபாவ நாட்டங்களைப் பின் பற்றாதிருக்கவும், எந்தக்காரியத்திலும் சுபாவத்தின் திருப்தியைத் தேடாமலிருக்கவும், எல்லாம் சர்வேசுரனுக்காக மாத்திரம் செய்யவும், அவருடைய நேசத்தின் உத்தமமான பலியாக இருக்கவும், சர்வேசுரனுடைய நிர்மலமான உத்தம நேசத்தை அடையவும் வரம்" ஆகிய இவைகளே.

மரிசகோதரி வார்த்தைப்பாடு கொடுத்த நாள் அவளுடைய சீவியகாலத்தின் நாட்களில் அத்தியந்த பாக்கியமும் பலனுமுள்ளதாய் விளங்கினது. அத்தினத்தில் அவள் ஆத்துமத்தில் தேவ ஆசீர்வாதங்களும், அருமையான வரங்களும், உன்னத ஞான ஒளிகளும், மனோகரங்களும் ஏராளமாய்ப் பொழியப்பட்டன.

மரிசகோதரி வார்த்தைப்பாடு கொடுத்த சில தினங்களுக்குள்ளாக அவளுடைய இருதயத்தை நிரப்பிய ஞான சந்தோஷங்கள் விலகிப்போயின. எல்லாம் கஷ்டமாய் ஆயாசமாய்த் தோன்றின.

அவள் முன் சுகித்த அக்களிப்பும் ஆறுதலும் நீங்கினபோதிலும் அவளுடைய பிரதிக்கினைகள், தீர்மானங்கள் சற்றும் மாறவல்லை. தன் திவ்ய பத்தாவுக்காக தன்னை பலியிட்ட அவள் அப்போது அடிக்கடி உச்சரித்து வந்த வார்த்தைகளாவன:—"நான வார்த்தைப்பாடு கொடுத்ததிலிருந்து என் இருதயத்தில் ஓர் பொக்கிஷத்தைக் கொண்டிருக்கிறேன, நமதாண்டவர்தான் அப்பொக்கிஷம். நான் அவருக்கு ஆத்தும சரீரத்தோடு சொந்தமானவள்" எனபனவாம். விலை மதிக்கப்படாத அப்பொக்கிஷத்தைக் காப்பாற்றுவதே மரிசகோதரியின் பேராவலாய் இருந்தது. தனது திவ்ய பத்தாவின்மேல் வைத்த அன்பினால், அவருக்காகவும் அவரோடும் துன்பப்பாடுகள் பட அவளுக்கிருந்த ஆசைக்கு அளவில்லை. இந்த ஆசைககு இணங்கி நமதாண்டவரும் அவளுக்குத துன்பஙகளை ஓயாமல் அனுப்பி வந்தார். தனனழைப்பைப்பற்றிய பலத்த சோதனைகளும் சந்தேகஙகளும் பலமுறை அவளை வாதித்தன. அக்காலத்தில் 1891-ம் வருஷம் ஜூன் மாதம் 4-ந் தேதி மன்ஸ்டர் மடத்தின் சிரேஷ்ட தாயாராகிய அர்ச். (Lambert) லாம்பெர்ட்டின் மரியம்மாள் மரணித்தது அவளுக்கு ஆருத்துயரை வருவித்தது. இந்த சிரேஷ்ட தாயார் நமது மரிசகோதரிக்கு மெய்யான தஞ்சமும் வழிகாட்டியுமா யிருந்தாள். அவளை வெகு பட்ச கனிகரத்துடன் நடத்திவந்தாள். இதைப் பற்றி மரி எழுதுவதாவது: "எங்களால் மிகவும் நேசிக்கப்பட்ட எங்கள் சிரேஷ்ட தாயார் எனக்கு எல்லா வற்றிலும் உற்றதுணை. அவள் என் சகல போராட்டங்களிலும், என் நவசந்நியாசத்தின் சகல வருத்தங்களிலும் என்னுடன் அநுதபித்து, என் வார்த்தைப்பாட்டின பிறகு உண்மையான தாயைப்போல் என்னை நேசித்து ஆதரித்து வந்தாள். எல்லாவற்றையும் அவளுக்குத் தெரிவிக்கவும், எல்லாவற்றைப்பற்றியும் அவளிடம் போகவும் நான் பழகியிருந்தேன். அற்பக்காரியங்களிலும், பெரியகாரியங்களிலும் அவளுடைய இருதயம் என் மட்டில் திறந்தவண்ணமாயிருந்தது. அவளுடைய உதவி எனக்கு ஒருபொழுதும் குறைவுபட்டதில்லை. இப்பொழுது இவையெல்லாம் ஒரு நொடியில் என்னை விட்டகன்றன. இதுவரையில் எங்கள் தாயார் என்னைத் தன் கரங்களில் ஏந்திச் சென்றாள் என்னலாம். என் ஒவ்வொரு அடியையும் அவள் நடத்தி என்னை ஆதரித்தாள். இப்பொழுது ஒரு துணையுமின்றி அங்கலாய்த்து நிற்கிறேன். இந்தச் சமயத்தில் நான் பட்ட வியாகுலத்தை நமது நல்ல ஆண்டவர் ஒருவரே அறிவார். இதற்குச் சமானமான கஸ்தியை நான் ஒருபோதும் உணர்ந்தேன் இல்லை. என்றாலும் என் முழு இருதயத்தோடு இந்தப் பரித்தியாகத்தை நமது நலல சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தேன். அவருடைய திருச்சித்தத்துக்கு என்னை முழுதும் கையளித்தேன். என்றாலும் அகோர கஸ்தியைவிட வேறொன்றும் நான் உணரவில்லை. ஜூன் மாதம் 6-ந் தேதி மாலை, தேவநற்கருணை பீடத்தினமேல் ஸ்தாபகமாய் இருக்கும்போதுதான் முதல் விசை நான் சற்று ஆறுதல் அடைந்தேன்.

இனிமேற்பட சற்பிரசாதத்தில் நமதாண்டவர் எனக்கு எல்லாத்திலும் எல்லாமுமாய் இருக்க விரும்புவதாகவும், என்னைப் பரிபாலிப்பதாகவும், என்னைத் தனிமையாய் விட்டு விடுவதில்லையென்றும், நானே தேவநற்கருணையில் முன்னைவிட இன்னுமதிகமாய் அவருடன் ஐக்கிய பந்தனமாக முயற்சிக்க வேண்டுமென்றும்,

அதுவே என் சகல முயற்சிகளுக்கும் நடுநிலையா யிருக்க வேண்டுமென்றும், சற்பிரசாத பேழையி னின்று அவர் என்பேரில் விழிப்பாயும், கண் ணுங் கருத்துமா யிருப்பாரென்றும், என் முழு ஜீவியத்துக்கும் அவரே மையமாய் இருக்க விரும் புகிறார் என்றும், நமதாண்டவர் எனக்குச் சொல் வதாகக் காணப்பட்டார்."

மடத்து சிரேஷ்ட தாயார் புதிதாய் நியமிக் கப்பட்டாள். மரிசகோதரிக்கு இவள் அன்பை யும் பட்சத்தையும் காட்டி வந்தாலும், முந்தின தாயாரைப்போல் அவ்வளவு கனிகரத்தையும் விசுவாசத்தையும் காண்பித்துக் கொள்ளவில்லை. இதினுல் மரிக்கு வந்த துயரமும் சஞ்சலமும் மெத்த. 1891-ம் வருஷம் ஜுலை மாதம் 31-ந் தேதி மரிசகோதரி தன் பச்சாத்தாப பாலருக்கு (First Mistress) முதல் எஜமானியாக நியமிக் கப்பட்டாள். இதுவரையில் முதல் எஜமானிக்கு துணை சகோதரியாக இருந்தாள். நல்ல ஆயன் சபையில் பச்சாத்தாப பாலரைக் கண்காணிப்ப தும், அவர்களுடைய ஆத்தும சரீர காரியங்கள் யாவற்றையும் நடத்துவதும், முதல் எஜமானி யின் பொறுப்பான அலுவல். அவர்கள் காலையில் நித்திரையிலிருந்து எழுந்திருக்கும்போதும், இர வில் நித்திரை செய்யப்போகும்போதும், திவ்ய பூசை காணும்போதும், போஜனம் அருந்தும் போதும், இளைப்பாறும்போதும், விளையாடும் போதும் முதல் எஜமானி அவர்களோடு இருப் பது அவசியம். அவர்கள் வேலை செய்யும்போ து, அவர்கள் மத்தியில் உயர்ந்த ஆசனத்தின் மீது உட்கார்ந்திருப்பாள். தினந்தோறும் வேத சம்பந்தமான ஓர் விஷயத்தைப் பற்றியாவது, அல்லது அவ்வப்போது திருச்சபை கொண்டா டும் திருநாளைப்பற்றியாவது அவர்களுக்கு உபந் நியாசிப்பாள். சில சமயங்களில் அப்பாலர்களின் குற்றங்குறைகளை எடுத்துக்காட்டி, அவர்கள் சீர் திருத்திக்கொள்ளுமாறு நற்புத்திமதிகளைப் புகட் டுவாள்.

அவளுடைய, நடை, நயம், வாக்கு கிரியை, ஒழுக்கம் முதலானவைகள் எல்லோரையும் இரம்மிக்கச் செய்தது. எல்லோரிடத்திலும் வாஞ்சை பாராட்டினுள். தயை, சாந்தம, பராம ரிப்பு, அரவணைப்பு, அன்பு, இரக்கம், சகிப்பு இத்தியாதி சற்குணங்களைப் படைத்தவளானதி ஞல், பச்சாத்தாபப் பாலர் அவளை இடைவிடாது சுற்றிக்கொண்டே திரிவார்கள். மரிசகோதரி எழு துவதாவது: "நமது காவலான சம்மனசுக்கள் நம்முடன் ஓயாமல் இருப்பதுபோல் நாமும் இப்பாலரோடு இருத்தல் வேண்டும். நமக்கு இப்பாலர் தங்கள் குற்றங்களால் வருவிக்கும் வருத்தமானது நமது அழைப்பின் சிலுவையாம். இதை நாம் சுமந்துகொண்டு நமதாண்டவரைப் பின் செல்லவேண்டும். இப்பாலருக்காக நாம் வெகுவாய் செபித்து, அவர்களுக்காக அநேக பரித்தியாக முயற்சிகளை ஒப்புக்கொடுக்க வேண் டும். ஆனல் ஒருபோதும் நாம் அதைரியப்பட லாகாது." மரி துரோஸ்ட சகோதரி புண்ணி யத்தில் சற்று தேர்ச்சியடைந்த பச்சாத்தாபபா லர்களுக்கு புகட்டின புத்திமதிகளில் சில பின் வருமாறு:

1. உங்கள் தோழிகளில் சிலர், அடங்காதவர் களாய் அல்லது துர்க்குணமுள்ளவர்களாயிருந் தால், உடனே நமதாண்டவரை நோக்கி மன்ரு டுங்கள். பத்தியாய் (Memorare) "மிகவும் இரக்கமுள்ள தாயே," அல்லது (Subtuum) "சர் வேசுரனுடைய அர்ச். மாதாவே இதோ உம்மு டைய சரணமாக ஓடிவந்தோம்" என்ற ஜெபங்க ளைச் சொல்லுங்கள். அவர்களில் மாற்றம் உண் டாவதைக் காண்பீர்கள். எத்தனை தடவை நான் இப்பாலருக்காக தேவநற்கருணை முன்பாகப் போய் Tota Pulchra என்னும் பாடலைச்செபித் தேன். Pange Lingua என்னும் நேர்த்தியான பாடலைச் சொல்லி சில துஷ்ட பாலருக்காக நான் அநேகாநேக வரங்களைப் பெற்றடைந் தேன். தேவநற்கருணை பக்தியும், பரிசுத்த கன் னிமரியாயின் பக்தியும் எனக்கு மிகவும் இஷ்ட மானவை" என்பனவாம்.

மரி துரோஸ்ட சகோதரி இப்பாலருக்காக ஓயாமல் உழைத்து வந்தாள். இதினுல் பல முறை தனது நுட்பமான சுகத்தைக் கெடுத்துக் கொள்வாள். ஒரு விசை சில பாலர் சிரங்கால் உபத்திரவப்பட்டார்கள். இவர்களைத்தானே பரா மரித்து சிகிச்சை செய்ததில், இந்நோய் இவளை யும் தொற்றிக்கொண்டது. இதனுல் அவள் மற்ற சகோதரிகளோடு புழங்க முடியாமல் தனிமை யாயிருக்க நேர்ந்தது. கோவிலில் நடக்கும் சபை ஜெபங்களுக்கும், ஒப்பீஸ் என்னப்பட்ட மந்திர மாலைப் பாடுவதற்கும்போகக் கூடுமாயில்லை. மரி சகோதரி வெகு இன்பமான தொனியோடு பாடு வாள். டார்பீல்டில் தன் மாளிகையிலிருக்கும் போதே லத்தீன் பாஷையில் சங்கீதங்களைப்

பாடுவதில் மெத்த தேர்ச்சியடைந்திருந்தாள். அக்காலத்திலேயே புதிய எற்பாட்டின் புஸ்தகங்களை லத்தீனிலிருந்து மொழி பெயர்த்திருந்தாள். தனது திவ்ய பத்தாவின் தோத்திரங்களைப் பாடுவதென்றால் அவளுள்ளம் பூரிக்கும்.

சில சமயங்களில் தன்னுடைய பலவீனத்தினால் வெகுவாய் சோர்ந்துபோவாள். அதிகாலையில் எழுந்திருந்து நன்மைவாங்கிவிட்டால் அந்நாள் முழுதும் ஒரு வேலையும் செய்ய திராணியற்றவளாவாள். ஆனால் திவ்யநற்கருணை உட்கொள்ளாதபடிக்கு சில நாழிகை அதிகமாய் காலையில் நித்திரை செய்தாலோ. தனது தினசரி கிருத்தியங்களைச் சரிவர நிறைவேற்றக்கூடுமாயிருக்கும். இவ் விரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டியதாயிற்று. மரி என்னசெய்வாள்! இதைத் தன் ஆத்தும குருவுக்குத் தெரிவிக்க, அவர், மரி தன் பச்சாத்தாப பாலர்களுக்காகச் செய்துவந்த வேலைக்கு கெடுதி வராதபடி, அவளை காலையில் அதிகம் நித்திரை செய்யும்படியாகக் கற்பித்தார். இதினால் பலமுறை மரி தேவநற்கருணை வாங்கக் கூடாமற்போயிற்று. ஆதலால் மெத்த வருத்தப்பட்டாள். ஆனால் அவளுடைய கீழ்ப்படிதல் மெத்த பேறு பலனுடையதாயிற்று. மரியின் ஞான சீவியத்தில் முக்கியமாய்பரித்தியாகமே துலங்கி பிரகாசித்தது. மரி சகோதரி வார்த்தைப்பாடு கொடுத்தபின் மன்ஸ்டர்நகர் மடத்தில் சுமார் 3 வருஷ மிருந்தாள். இக்காலமெல்லாம் தன் சரீரத்தில் அவள் பட்ட துன்ப துரிதங்கள், தன் அழைப்பைப்பற்றிய சந்தேகத்தால் அவளுக்குண்டான நீடிய பயங்கரமான போராட்டங்கள், தன் பரிசுத்த கடமைகளை நிறைவேற்றுவதில் அவள் அடைந்த மனவறட்சி, வெறுப்பு, சலிப்பு, அரோசிகம், மனக்கிலேசம் இவை முதலான வாதனைகள், நாவால் எடுத்துரைக்கமுடியாது. ஆனால் இக் கஷ்ட துன்ப சோதனைகள் மத்தியில் அவளிடத்தில் தாழ்ச்சி, கீழ்ப்படிதல் சுயப் பரித்தியாகம், பொறுமை, சாங்கோபாங்கம் அதிசயப்படத்தக்கவையாய் விளங்கின. வெளிக்கு அவள் முகம் சதா புன்நகையுடன் மலர்ந்த வண்ணமாய்ப் பிரகாசிக்கும். தேவ சிநேகத்தின் ஒளியால் ஜொலிக்கும். அவள் முக செழிப்பும், நேத்திரங்களின் வசீகரமும், நடை பாவனையின் அடக்க ஒடுக்கமும், அவளுடைய பரிசுத்த ஆத்துமத்துக்கு அத்தாட்சியாயிருந்தன. ஆகிலும் அவளுடைய ஆத்துமத்தில் பயங்கரமான ஆராட்டங்களும், போராட்டங்களும், கஸ்தி வியாகுலங்களும் பெரும் புசல்போல் எழும்பி அவளுடைய பேறு பலன்களை உயர்த்தி வளர்த்துவந்தன.

S. M.

(தொடரும்.)

GNANAMANI, III PART.

ஞானமணி 3-ம் பாகம்.

48-ம் அதிகாரம்.

பிள்ளையோ பிள்ளை! ஆண்பிள்ளை பிள்ளை:
வாங்குகிறவர்கள் வாங்கலாம்,
அழகான பிள்ளை!!

மேற்கண்டவாறு சிறுவர் பாடி முடியவே, தர்மானந்தபுரத்தில் 50 வருஷங்களுக்கு அதிகமாய் விசாரணை செய்து, யாவராலும் அன்புடன் நன்கு மதிக்கப்பெற்ற அவ்வூர்பங்குஸ்வாமியார் எழுந்து நின்றார். அவர் என்ன சொல்லப்போகிறாரோ என்று அங்கு கூடியிருந்த குருப்பிரசாதிகளும் கிறீஸ்துவர்களும் அதியாவலுடன் அவரை நோக்கிக்கொண்டிருந்தார்கள்.

இப்படி வந்திக்கத்தக்க பங்கு ஸ்வாமியார் எழுந்து நிற்கவே, அவருடைய முகத்தில் சந்தோஷமும் பிரகாசமும் காணப்பட்டது. தமது இருதயத்தில் கிளம்பும் சந்தோஷானந்தத்தை அடக்கக் கூடாதவராய், "என் இருதயத்துக்கு கந்த பக்ஷமுள்ள பிள்ளைகளே!" என்னவே, அவருக்கு பேச நாவராமல் நிற்பதையும் அவர் கண்களினின்று கண்ணீர் உதிர்வதையும் கண்டவர்கள் அதிசயப்பட்டார்கள்.

பிறகு அவர் வாய்திறந்து சொன்னதாவது: "*Nunc dimittis servum tuum Domine secundum verbum tuum in pace. Quia viderunt oculi mei salutare tuum.*"

"தேவமாதா நாற்பதாம் நாள் சடங்கு நிறைவேற்றிக்கொள்ளும்பொருட்டு தேவாலயத்துக்குத் தமது தேவ குமாரனைக் கொண்டுபோனபோது, தீர்க்கதரிசியாகிய அர்ச். சிமயோன்

தேவபாலனைக் கையிலேந்தி அவரே உலக இரக்ஷகரென்று இஸ்பிரீத்துசாந்துவினால் ஏவப் பெற்று, 'ஆண்டவரே! தேவரீர் அடியேனோடு வாக்களித்தப்பிரகாரம் இன்று உமது இரக்ஷணியத்தை நான் கண்டபடியால், என்னை உமது சந்நிதானத்துக்கு அழைத்துக்கொள்ளும்.' என்று சொன்னதுபோல இன்று நானும் அந்த தேவ வாக்கியத்தைக் கூறி யென்னையும் இவ்வுலகத்தினின்று அழைத்துக்கொள்ளும்படி தேவாதி தேவனை நோக்கி மன்றாடுகிறேன்."

"ஏனெனில், நான் அநேக வருஷகாலமாய் திரியேக சர்வேசுரனையும் என்றும் கன்னிகையான தேவதாயாரையும் விஸ்வாச நம்பிக்கையுடன் மன்றாடிப் பிரார்த்தித்த என் விண்ணப்பம் இன்று கைகூடினபடியால் சர்வேசுரனுக்கு நன்றிகூறி, அமலோற்பவ மாதாவுக்கு புகழ்புரிய கடமைப்பட்டிருக்கிறேன்" என்றார்.

இதைக் கேட்டவர்கள், இந்த வருஷம் ஞான ஒடுக்கம் மற்ற வருஷங்களிலும் அதிக சிறப்பாயும் அனுகூலமாயும் முடிந்தபடியால் பங்கு ஸ்வாமியார் சந்தோஷித்து இப்படிப் பேசுகிறாரென்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அவருடைய சந்தோஷத்துக்கு வேறொரு காரணமுண்டு.

அதற்குப்பின் பெரிய ஸ்வாமியார் தமக்கு முன் நின்ற அபிராமியம்மாளைக் கிருபையுடன் கடாக்ஷித்து, "அம்மா அபிராமி! கடந்த அநேக வருஷகாலமாய் நீயுன் புருஷனால் அனுபவித்து வந்த கஷ்ட நஷ்டங்களையும் அவமானத்தையும் பற்றி நான் மாத்திரமல்ல, இங்கு கூடி யிருப்பவர்களும் அறிவார்கள்" என்று சொல்ல, அபிராமியம்மாள் ஸ்வாமியாரை நோக்கி, "என் பிரிய தகப்பனே! உங்களுடைய புத்தி போதகத்தால் அவைகளை பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தேன். அந்த நிர்ப்பாக்கிய மனிதனிருக்குமிடம் தெரியாவிட்டாலும் அவர் மனந்திரும்பும்படி நாடோறும் சர்வேசுரனைப் பார்த்து வேண்டிக்கொண்டு வருகிறேன்" என்றாள்.

அப்போது ஸ்வாமியார், "உன் பிரிய குமாரனைப்பற்றி யென்ன?" என்று வினவினபோது: அபிராமியம்மாளின். கண்கள் கலங்கி கண்ணீர் சொரிந்துகொண்டு மொழிந்ததாவது :—

"சங்கைக்குரிய பிதாவே! என் பிரிய குமாரனை யிழந்ததா லுண்டான கஸ்தி வியாகுலம் சர்வேசுரனுக்கு மாத்திரந் தெரியும். ஆயினும் தங்களுடைய சத்புத்தியால் நான் ஆறுதல் கொண்டு, அந்தக் குழந்தை சத்திய வேதத்தில் வளர்க்கப்பட்டு வரும்படி நாடோறும் இடைவிடாமல் கர்த்தரைப் பார்த்து மன்றாடி வருவதுடன், அதே கருத்துக்காக வேண்டிக்கொள்ளும்படி யென் ஸ்நேகிதரைக் கேட்டுக்கொண்டதும் தங்களுக்குத் தெரியாத காரியமல்ல. என் சீவிய காலமட்டும் அவ்வாறே செய்துவருவேன். தகப்பனே தாங்களும் என் கருத்துக்காக வேண்டிக் கொள்ள மறவாதேயுங்கள்" என்றாள்.

"என் பிரிய புத்திரியாகிய அபிராமி! நான் கடந்த 25 வருஷகாலமாய் உன் கருத்துக்காக வேண்டிக்கொண்டு வருகிறேன். ஆனால் வருஷ முழுதும் மாரி பொழியாது. அப்படியே காற்றும் புயலும்; சந்தோஷமும் கஸ்தியுமவ்வாறே. சர்வேசுரன் உன் கண்ணீரைத் துடைத்து உனக்கு ஆறுதல் வருவிப்பாராக" என்று அந்தப் புண்ணியவதியைத் தேற்றின பின், டிக்ரூஸ் ஸ்வாமியாருடைய இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு, "ஸ்வாமீ யெழுந்திருங்கள்" என்னவே, அவரும் எழுந்து நின்றார்.

அன்னேரத்தில் ஒரு பியூன் டிக்ரூஸ் ஸ்வாமியாருக்கு ஒரு தந்தி கொண்டுவந்து கொடுத்தான். அவரதைப் பிரித்து வாசித்துக்கொண்டிருக்கும்போது பங்கு ஸ்வாமியார், தமது கையால் டிக்ரூஸ் ஸ்வாமியாருடைய கைரெண்டையும் பிடித்துக்கொண்டு அவரை நோக்கி, "ஸ்வாமீ, விஸ்வாச நம்பிக்கையுடன் தேவனைப் பார்த்து வேண்டிக்கொண்டால், அவர் பராமுகமாயிருப்பாரோ? நீங்களே சொல்லுங்கள்" என்றபோது, டிக்ரூஸ் ஸ்வாமியார் "கேளுங்கள் கொடுக்கப்படும் என்று, நமது திவ்விய கர்த்தரே திருவாய்மலர்ந்து வசனித்திருப்பதால் நாம் விஸ்வாசத்தோடு வேண்டிக்கொண்டால், நாம் நினையாதபோதே நமது மன்றாட்டு கேட்கப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை" யென்றார்.

தபால் பியூனும் அநேகருக்கு தபால் கடிதம் கொடுத்ததுடன் சங். டிக்ரூஸ் ஸ்வாமியாருக்கும் இன்னொரு கடிதங் கொடுத்தான்.

அதற்குப் பின் பங்கு ஸ்வாமியார் அதுமெய் என்று சொல்லி தாம் பிடித்திருந்த டிக்ரூஸ் ஸ்வாமியாருடைய இரு கரங்களையும் அபிராமியின் கரங்களில் வைத்து, "அபிராமியம்மா! என் பிரிய புத்திரி! உனக்கு சர்வேசுரன் கட்டளையிட்ட சோதனைகாலம் முடிவாகிவிட்டது,

உனக்கு எதிராக நிற்கும் சங். டிக்ரூஸ் ஸ்வாமி யாரைப்பார்! ஏரெடுத்துப்பார்! இவர்தான் உன் பிள்ளை!! 23 வருடங்களுக்குமுன் உன் கண்ணி லிருந்து காணாமற்போன கண்விழி இவரே! நீ அருமையாய் வளர்த்தவரும், ஒனுய் கையில் அகப்பட்டுக்கொண்டவருமான உன் நேசபாலன் இவரே! ஆம், உயிருக்கு உயிராய் நீ வளர்த்த உன் சிலுவைநாதன் இவர்தான்! காணாமற் போன உன் குழந்தை சத்தியவேதத்தில் வளர்க் கப்படும்படி நீ கர்த்தரை மன்றாடினபடியே அவர் சத்திய வேதத்தில் வளர்க்கப்பட்டதுடன் சர்வேசுரனுடைய ஸ்தானுபதிக்கத்தையும் பெற்று, அவரால் அபிஷேகஞ் செய்யப்பெற்ற குருவுமா யிருக்கிறார்!!!

நான் இப்போது சொன்ன ஒவ்வொரு வார்த் தையும் உண்மையானதே. அவருடைய இடது கரத்தின் சுண்டுவிரலைப்பார். உன் நிற்பாக்கிய புருஷன் ஒரு நாள் இராத்திரி வேளையில் உன் வீட்டில் பிரவேசித்து, குடிவெறியால் குழந்தை யின் விரலை மிதித்து நசுக்கி விட்டபடியால் அந்த விரல் சத்திரம் செய்யப்பட்டிருக்கிறதை நீ யறிவாயல்லோ? இதோ இவருடைய விரல் அறுபட்ட தழும்பு இன்ன மிருக்கிறது" என்று சொன்னபோது. அபிராமியம்மாள் ஸ்வாமியாரு டைய வார்த்தைபை நம்பினது மல்லாமல் அற் புதமாய் கண்டடைந்த தன் பிள்ளையைக் கண் ணால் ஏறிட்டு நோக்கினபோது ஒருவித அதிசய பிரமைகொண்டு, பேச வாய்வராமல் நட்ட ஸ்தம்பம்போல் மௌனமாய் நின்று, இவர் ஒன் றரை வருஷத்து குழந்தையா யிருந்தபோது இருந்த அதே முகச்சாயலுக்கு ஒத்து இருப்ப பதாக அறிந்து அவருடைய இரண்டு கரங்களை யும் தன் கைகளில் ஏந்திக்கொண்டு சந்தோஷ மகிழ்ச்சியாலும் பக்ஷ நேசத்தாலும் ஏராளமாய்க் கண்ணீர் சிந்தி அவரை முத்தி செய்தாள்.

அன்று கண்டி மேற்றிராணியாரிடமிருந்து தமது பேருக்கு வந்திருக்கும் தந்தியில் "இன்று சாயந்திரம் உமது பிரிய தாயாரைப் பார்த்து சந் தோஷித்து மகிழ்ந்து பூரிப்படைய பாக்கியம் பெறுவீர். நாமும் உம்மோடு சந்தோஷிப்பதுடன், சர்வேசுரனுக்கு நன்றியும் செலுத்துகிறோம். இப்படிக்கு கண்டி மேற்றிராணியார்." என்று தமக்கு எட்டிய தந்தியை வாசித்தபின், தாம் கடாக்ஷிக்கும் மகா காக்ஷி மெய்யான காக்ஷியே என்று நிச்சயித்துச் சந்தோஷப் பூரிப்படைந்து, தன் பிரிய தாயாரைப் பக்ஷ அன்புடன் நோக்கி, சந்தோஷக் களிப்புகொண்டு, தமது நேத்திரங்க ளில் முத்துபோல் உதிரும் கண்ணீரைத் துடைத்துவிட்டு தமது தாயாரைப் பக்ஷத்துடன் முத்தி செய்தார்.

அங்கு கூடியிருந்த குருப்பிரசாதிகளும் ஜனங்களும் இதென்ன அதிசயம்! 23 வருஷத் துக்கு முன் காணாமற்போன குழந்தை இப் போது குருப்பிரசாதியாய் இங்கு வந்து நிற்பது என்ன ஆச்சரியம்! அவருடைய முகத்தைப் பார்த்தாலோ, அபிராமியம்மாளுடைய முகம் அச்சடித்தாற்போல விளங்குகிறது அவரிடத் தில் என்று சொல்லி அங்கு நடக்கும் சங்கதிக ளைக் கண்டு அதிசய பிரமையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்நேரத்தில் பங்கு ஸ்வாமியார் விஸ்வாச நாயகர் காதில் என்னவோ மெதுவாய் ஓத, நாய கரும் கூட்டத்தைக் கடந்து போய், தூரத்தில் உட்கார்ந்திருந்த அன்னம்மாள் என்னும் பெய ரையுடைய தொண்ணூறு பிராயமுள்ள ஒரு விருத்தாப்பிய ஸ்திரீயை அழைத்துக்கொண்டு வந்தார் பங்கு ஸ்வாமியார் சமுகத்துக்கு.

அந்தக்கிழவி விருத்தாப்பிய மேலிட்டதால் முதுகுவளைந்து ஒருகையில் ஒருதடியைப் பிடித் துக்கொண்டு வேறொரு கையால் நாயகருடைய கையைப் பிடித்துக்கொண்டு பங்கு ஸ்வாமியார் பாதத்தண்டையில் வந்து உட்கார்ந்தாள். கிழ வியை ஸ்வாமியார் பார்த்து, "அன்னம்மா! அன் னம்மா! என்று சத்தமாய்க் கூப்பிட்டபோதி லும், அவளுடைய கண்கள் இருண்டு காதுகள் சற்று மந்தமாய் இருந்தபடியால் அவளுக்குக் கேட்கவில்லை. மூன்றும் விசை கூப்பிட்டபோது, "ஸ்வாமீ!" என்றாள். அப்போது குருவானவர் "உன் குழந்தை யெங்கே?" என்று கேட்டார். அவள் "என்ன ஸ்வாமி, 90 பிராயமுள்ள கிழவி யாகிற எனக்குக் குழந்தையேது!" என்றாள். "நீ விலைக்கு வாங்கின குழந்தை" என்றார். "நான் எந்தக் குழந்தையை வாங்கினேன் ஸ்வாமி?" என்று கேழ்க்க "24 வருஷத்துக்கு முன்னே நீ நம்மிடம் கொண்டுவந்த குழந்தையைப்பற்றி மறந்துபோனாயா?" "ஓ, ஓ! அந்தக் குழந்தை யா? அபிராமியின் அந்தக் குழந்தையைப்பற்றி யாருக்குஞ் சொல்லவேண்டா மென்றீர்களே ஸ்வாமி, அது இப்போது எங்கே இருக்கிறதோ தெரியாது; உங்களுக்குத்தானே தெரியவேணும் சுவாமி எங்கே இருக்கிறதென்று."

"இவர்தான் அன்னம்மா" என்று டிக்ரூஸ் ஸ்வாமியாரை சுட்டிக்காட்டவே, "இவர்தானு! ஆ! என் ஸ்வாமீ! என் மயிலே, குயிலே" என்று உட்கார்ந்துகொண்டே அவருடைய கால் இரண்டையும் பிடித்துக்கொண்டு, "நீர்தானு! எனக்குத் தெரியாமல்போய்விட்டதே" என்று அவருடைய பாதத்தைக் கட்டி தழுவும்போது, டிக்ரூஸ் ஸ்வாமியார் அன்னம்மாள் பக்கமாகக் குனிந்து அவளுடைய இரண்டு கரங்களையும் பிடித்துக்கொண்டு "சும்மா உட்காரு" பாட்டியென்ருர்.

பங்கு ஸ்வாமியார் கிழவியைப் பார்த்து, "அன்னம்மா! நீ 24 வருஷத்துக்குமுன் அறையணுவுக்கு வாங்கின குழந்தையின் வரலாற்றைச் சொல். இதுவரையிலும் அதைப்பற்றி பேசாதபடிக்கு நாம் உனக்கு கண்டிப்பான கட்டளை கொடுத்தது வாஸ்தவமே. ஆனுல் இப்போது உனக்கு உத்தரவு கொடுக்கிருேம்; நடந்த சகலத்தையும் இங்கு கூடியிருப்பவர்களுக்கு அறிவிப்பாயாக" என்ருர்.

அப்பொழுது அன்னம்மாள் உட்கார்ந்தபடியே அங்கிருந்த சகலரும் அவள் பக்கமாய்க் காது கொடுத்துக் கேட்கும்படி பின்வருமாறு சொல்லத் தொடங்கினுள்.

"அபிராமியம்மாள் பதித மதத்தினின்று சத்திய வேதத்தில் சேர்ந்த சில வருஷத்துக்குப் பின் அவருடைய தாயார் இறந்துபோனதைப் பற்றியும் அவளுக்கு பந்து ஜனங்கள் இல்லாததைப்பற்றியும் நான் அடிக்கடி அவள் கிட்டே போய் பேசி வருவேன். நான் கேட்டுக்கொள்வதனமேல் அவள் ஏதாகிலும் நல்ல புஸ்தகம் எடுத்து எனக்கு வாசிப்பாள.

ஆனுல் அபிராமியம்மாள் கலியாணம் செய்துகொண்ட மறு வருஷத்தில் அவளுடைய புருஷனுல் அநுபவித்து வந்த துன்ப துரிதம் கொஞ்சமல்ல. நானும் அவளுக்கு ஆறுதலான வார்த்தை சொல்லிவருவேன். ஒரு நாள் நான் அபிராமியோடு பேசிக்கொண்டிருக்கும்போது, அவள் புருஷன் குடிவெறியால் மதிமயங்கி, பாவம்! அந்தப் பெண்ணை வாய்க்கு வராத பேச்சுகளால் திட்டவும், மயிரைப் பிடித்து இழுத்து முதுகில் குத்தவும் ஆரம்பித்தான். அப்போது நான் மனமிரங்கி, "இராஜாத்தி போல வளர்ந்த இந்தப் பெண்ணை ஏண்டா, அப்பா, இப்படி துன்பப்படுத்துகிருய்?" என்றேன். உடனே என்மேல் திரும்பிக்கொண்டு, பல்லை நெறநெறவென்று கடித்துக்கொண்டு "அடி கிழச் சிறுக்கி. நீ யினி வாயெடுத்தால் உனக்கும் இந்தப் பாடுதான், பத்ரம்! வெளியே போ" வென்ருன்.

நானே அங்கேயே உட்கார்ந்திருந்து, பொறுமைசாலியான அந்தப் பெண்ணுக்கு ஆறுதல் சொல்லி என் வீட்டுக்குப் போனேன்.

இது நடந்த மூன்ரும் நாள் நடுச்சாமவேளையில், காற்றின்றி புழுக்கமா யிருந்தபடியால், எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அப்போது எழுந்து வெளித் திண்ணையில் உட்கார்ந்து ஜெபமாலையை கையில் பிடித்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். அந்நேரத்தில் வெகு தூரத்திலிருந்து ஓர் சத்தம் கேட்டது. வர வர, அது யாருடைய சத்தமென்று அறிந்துக்கொண்டேன். அது சலமோனுடைய சத்தமே. நன்ருய்க் குடித்துவிட்டு வாய்க்கு வந்தபடி உளரிக் கொண்டு, "பிள்ளையோ, பிள்ளை! நல்ல பிள்ளை; ஆண்பிள்ளை பிள்ளை: வாங்குகிறவர்கள் வாங்கலாம். பொழுது போனுல் அகப்படாது. சுளுவான விலை, பிள்ளையோ, பிள்ளை!" என்று கத்திக்கொண்டு வரும்போது, கொண்டுவா ஐயா நான் வாங்கிக்கொள்ளுகிறேன்: என்ன விலை? என்றேன்.

"ஒரே ஒரு ரூபாய், ஒத்தை ரூபாய். பதினுறு அணுவுள்ள ஒரு ரூபாய்தான்" என்ருன்.

அப்போது நான் என் வெற்றிலை பையை அவிழ்த்து அதிலிருந்த அறையணுவைக்கொடுத்துவிட்டு பிள்ளையை வாங்கிக் கொண்டேன். அவன் பிள்ளையை யென் கையில் கொடுத்துவிட்டு காசை கையில் வாங்கிக்கொண்டு வாயில் வந்தபடி உளரிக்கொண்டு போனுன். மிதமிஞ்சி குடித்திருந்தான். என்னுல் சகிக்கக்கூடுமாயிருந்ததில்லை அவனிடத்திலிருந்து கிளம்பின துர்க்கந்தம்

விடிவதற்குள்ளாக குழந்தையை கோவிலுக்குத் தூக்கிக்கொண்டுபோய், ஸ்வாமியார் கோவிலுக்குப் போகும் சமயத்தில், நடந்த சங்கதியை அவருக்கு அறிவித்தேன். "மெத்த நல்லது, இதைப்பற்றி யாருக்கும் சொல்லாதே. இது விஷத்தில் கண்டிப்பான இரகசியம் காப்பாற்ற வேண்டு" மென்று, குழந்தையை வாங்கிக்கொண்டு அறைவீட்டுக்குப் போனுர்; இவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

இன்றைக்கோ அந்தக் குழந்தை பெரிய ஆளாகி குருப்பட்டம் பெற்று நமது கோவிலில் பிரசங்கம் பூசை நடத்துகிறார்! இது என்ன புதுமை! எவ்வளவு பாக்கியம் எனக்கு!!" என்று அவருடைய பாதங்களை மறுபடியும் பிடித்துக் கொண்டு முத்தமிட்டாள்.

"அதற்குப்பின் நடந்த சங்கதியை நான் சொல்லுகிறேன்: கேளுங்கள்" என்றார் ஸ்வாமியார். "அந்தக் குழந்தையை அன்றே ஒரு ஆள் மூலமாய் திருச்சிறைப்பள்ளிக்கு அனுப்பிவைத்தேன். அங்கிருந்த ஸ்வாமியாருக்கு நான் எழுதின பிரகாரமே அந்தக் குழந்தையை கண்டிக்கு அனுப்பிவைத்தார். அந்தப் பாலன் இந்த 24 வருஷகாலமாய் அங்கிருந்து படித்துக் குருப்பட்டம் பெற்று இப்போது தன் பிரிய தாயாரையும் ஊராரையும் சந்தோஷானந்தப் படுத்தும்படி வந்திருக்கிறார்" என்று சொல்லி முடித்தார் பங்கு ஸ்வாமியார்.

வணக்கத்துக்குரிய கண்டி மேற்றிராணியார் இன்று இங்கு நடந்தேறிய சந்தோஷ விருத்தாந்தத்தைப்பற்றி கடிதமெழுதி யிருக்கிறாரென்று டிக்ரூஸ் ஸ்வாமியார் பெரிய ஸ்வாமியாருக்கு அதைக் கொடுக்க, அவர் அதை சகலரும் அறியும்படிச் சுருக்கமாய் தமிழில், மொழிபெயர்த்துப் பின்வருமாறு சொன்னார்.

"நமக்கு மிகவும் நேசமுள்ள டிக்ரூஸ் ஸ்வாமியாருக்கு அப்போஸ்தலிக் ஆசீர்வாதம்.

இன்று உமக்கு நாம் அனுப்பிவைத்த இந்தக் கடிதத்துடன் ஒரு தந்தியும் உமக்குச் சேரும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம்.

நீர் இந்தியாவுக்குப் புறப்படுவதற்குமுன் நீர் கொடுக்கப்போகும் ஞான ஒடுக்க முடிவாகும் நாளில் பெருத்ததோர் சந்தோஷமான காரியத்தை கேட்பீர் என்று நாம் உமக்குச் சொன்னதை மறந்திருக்கமாட்டீரென்று நம்புகிறோம். அந்த சந்தோஷமான காரியம் ஏதெனில், இன்று நீர் உமது பக்ஷமுள்ள தாயார் அரவணைப்பில் சந்தோஷித்து மகிழ்ச்சி கொள்வீரென்பதே. நீர் எப்படி இந்த கண்டிதேசம் வந்தீரென்று இன்று அறிந்திருப்பீர்.

பக்தி விஸ்வாசமுள்ள உம்முடைய தாயாருடைய தர்ம நடத்தையையும் பொறுமை சாந்த முதலிய அரிய புண்ணியங்களையும் பற்றி பங்கு ஸ்வாமியார் மூலமாய் அறிந்திருக்கிறோம். இப் பேர்ப்பட்ட நல்ல தாயாருக்கு நீர் பிள்ளையாயிருப்பது பெரும் பாக்கியமே! அந்தப் புண்ணியவதியின் விடாவேண்டுதலால் இன்று இப்பெரும் சந்தோஷ பாக்கியம் உமக்கு உண்டானதென்பதற்குச் சந்தேகமில்லை.

உமது சந்தோஷம் பூர்த்தியாவதற்கு ஒரு குறையுண்டு. அது யாதெனில்; உமது தகப்பனுடைய நிற்பாக்கிய ஸ்திதியே! அவர் இருக்குமிடம் இதுவரையில் யாருக்கும் தெரியவில்லை. அப்படியவர் இதுவரையில் உயிரோடு இருந்தால், உம்முடையவும் உமது அன்புக்குரிய தாயாருடையவும் வேண்டுதலால் சத்தியவேதத்தில் சேர்ந்து சாவாரென்று நம்ப இடமுண்டு. சர்வேசுரனுடைய அளவற்ற ஞானத்தை அறியக் கூடியவனார்? இந்தக் கருத்துக்காக நாடோறும் வேண்டிவருவோம்.

கனந்தங்கிய பங்கு ஸ்வாமியாருக்கும் அவர் கிறீஸ்துவர்களுக்கும் உமது பிரிய தாயாருக்கும் விசேஷ விதமான அப்போஸ்தோலிக் ஆசீர்வாதம் பாலிக்கிறோம்.

இப்படிக்கு,
கண்டி மேற்றிராணியார்.

P. S. உமது ஜன்ம ஊரிலும் சுற்றுப் பக்கத்திலுமுள்ள உமது பந்துக்களிடம் போய் அவர்களைச் சந்தித்து வரும்படி அவ்வூரார் விரும்புவார்களென்று நமக்குச் சொல்லத்தேவையில்லை ஆகையால் இன்று தின முதற்கொண்டு மூன்று மாத காலம் உமது பங்கை விட்டு பிரிந்திருக்க உமக்கு உத்தரவு கொடுக்கிறோம்." என்று சொல்லி முடிக்கவே, இன்னம் மூன்று மாதம் சங். டிக்ரூஸ் ஸ்வாமியார் தங்களுக்குள் இருக்கப் போகிறதைப்பற்றி கேள்விப்பட்ட ஜனங்கள் சந்தோஷத்தால் கரகோஷ்டம் செய்து மகிழ்ந்தார்கள். பெரிய ஸ்வாமியார் எழுந்து "சர்வேசுரன் புரிந்த இந்த பேருபகாரத்திற்காகவும், நாம் துவக்கின ஞான ஒடுக்கம் அனுகூலமாய் முடிந்ததற்காகவும் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரப் பாடல் (Te Deum) பாடுவோ"மென்று அங்கு கூடியிருந்த குருப்பிரசாதிகளோடும் விஸ்வாசிகளோடும் சேர்ந்து தேவாலயம் சென்றார்.

சுயஞ்சீவியாகிய கடவுளுடைய திருவடியின் மகிமை யானந்தத்திற்கு பங்காளியானவர்கள் முற்றுந் துறந்தவர்களா யிருக்கவேண்டியது.
—(அர்ச். சிலுவை அருளப்பர்.)

CORRESPONDENCE.

கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர் ப—ர்.]

கண் வைத்தியம்.

ஐயா,

பிராஞ்சு இலாக்கா காரைக்காலைச் சேர்ந்த குரும்பகரத்தி லிருக்கும் P. ஜெயராயப்பிள்ளையாகிய நான் இதின் மூலமாய் வெளிப்படுத்திக் கொள்கிறதாவது:—

எனக்கு சுமார் ஐந்து வருஷகாலமாய் காட்ராக்ட் என்னும் கண் வியாதி உண்டாகி வியாதி முற்றி வீட்டில் கூட நடமாடக் கூடாததாயிருந்தது. அதன்பேரில் சென்னை ராஜதானிக்குள் காட்டராக்ட் முதலிய கண் வியாதிகளை சிகிச்சை செய்யும் பல வைத்தியர்கள் பல விடங்களிலிருந்தும் ஒரு வைத்தியரைக் கொண்டுதான் வைத்தியம் செய்துகொள்ளவேண்டி இருப்பதனால் இவர்களில் யாரிடத்தில் வைத்தியம் செய்து கொள்ளலாம்என்பதைப்பற்றிவெகுகாலம்வெகு பேரை விசாரித்து வந்ததில் சென்னை கண்ணாஸ்பத்திரியில் டாக்டராயிருக்கும் Surgeon Major Kirkpatric, I.M.S. துரையிடத்தில் வைத்தியம் செய்து கொள்வதுதான் உசிதம் என்று எனக்கு தோன்றி அவரிடத்தில் வைத்தியம் செய்து கொள்வதற்காக சென்னைக்கு சென்ற ஜூலைமீ 12உயனறு வந்தேன். அந்த தேதி முதல் ஒரு மாதம் அந்த துரையிடத்தில நான் வைத்தியம் செய்துகொண்டு வந்ததில் கண் வியாதி பூரணமாய் சௌக்கியமாகி கண் பார்வையும் உண்டாயிருக்கிறது.

நான் வைத்தியம் செய்துகொண்ட காலத்தில் என்னைப் போலொத்த வியாதி உள்ளவர்களும் இன்னும் பலவிதமான கண் வியாதி உடையவர்களும் அந்த துரையிடத்தில் வைத்தியம் செய்துகொண்டதில் எல்லோரும் சௌக்கியமடைந்தார்கள். என்ன ஆச்சரியம்! இந்த வியாதியை எனக்கு சௌக்கியப்படுத்தினதில் எனக்குள்ள நன்றியறிதலை உலகமறிய பைரங்கமாய் வெளிப்படுத்தினால்தான் என் மனசுக்கு திருப்தியுண்டாகலாமென்று தோன்றியதினால் அதின் விவரத்தை இதின் மூலமாய் வெளிப்படுத்துகிறேன்.

பிராஞ்சு இலாக்கா காரைக்கால் புதுச்சேரி முதலிய விடங்களிலும் இங்கிலீஷ் இலாக்காவிலனேக விடங்களிலும் எனக்குத் தெரிந்தவர்களனேக ரிருப்பதினாலும் அவர்களிற் சிலருக்கு மேற்படி கண்வியாதிகளிருக்கலாம். ஆனதினாலவர்களெல்லோரும் மேற்படி டாக்டர் துரையினுடைய வைத்திய திறமையின் பிரயோஜனத்தை அடையலாமென்பதைப்பற்றியும் அவர்கள் பேரில் எனக்குள்ள பரோபகார சிந்தையைப்பற்றியும் இதின் மூலமாய் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். அன்றியும் ஐரோப்பாவில் இப்பொழுது நடந்துவரும் சண்டையினிமித்தம் உத்தியோகஸ்தர்களை நினைத்த நேரத்தில் நினைத்தவிடங்களுக்கு மாற்றிப் போடுவார்களாதலால் இந்த துரைக்கும் அவ்விதம் ஒருக்கால் நடப்பதற்கு முந்தி எல்லோரும் அவருடைய திறமையின் பிரயோஜனத்தைக் கைப்பற்றிக் கொள்வார்களாக.

செக்கந்திராபாத்.

அமலோற்பவ அர்ச். லூர்தாண்டவளின் திருவிழாவை இவ்வருடமும் மெத்த சிறப்பாக கொண்டாட வேணடுமென்றும், இதனுடன் ஜனங்களுக்கு ஞான ஒடுக்கம் கொடுக்க வேண்டுமென்றும எங்களருமைஞானத்தந்தையாகிய சங். சூசை மென்கோனி சுவாமியாரவர்களுக்கு ஓர் பேராவலிருந்துவந்தது. இவ்வைபவ சிறப்புக்காக சில மாதமளவாய் கத்தோலிக் சுதேச கிறீஸ்துவர்களிடமிருந்து பணம் சேகரஞ்செய்ய முயற்சிக்கலாயினர். எங்கள் மனதில் ஆழமாய் பதிந்திருக்கும் துர் நடத்தைகளை பற்றற நீக்கி ஞான அறிவையூட்ட திருச்சினுப்பள்ளி மேற்றிராசனத்தைச் சார்ந்தவரும் சாதுரிய பிரசங்கியுமாகிய ஜே. எம். அருள்நாத சுவாமியாரை அழைப்பிக்கலாயினர்.

"யானைவரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்றுப்போல் பிரசங்கியார் வரும் சங்கதி ஓர் மாதத்துக்கு முன்னமேயே செவிக்கு எட்டினது. டிசம்பர்மீ 6உயி லிருந்து 9உ வரையில் திரிதின ஞான ஒடுக்கம் கொடுக்கப்படுமென்று விளம்பரத்தில் குறித்திருந்ததால் அந்நாள் எப்போது சமீபிக்குமோவென்று ஜனங்

கள் ஆவலுடன் காத்திருந்தார்கள். 6வ-யிலிருந்து 9வ- வரையில் பிரசங்கியார் மொழிந்த ஒவ்வொரு மொழியும் மின்னலுக்கும், இடிக்கும், வான குமரலுக்கும் ஒப்பாகவிருந்தது. உலகமுடிவைப்பற்றியும் பொதுத்தீர்வையைப்பற்றியும் பேசும்போது மெய்யாகவே அநேகருக்கு நடுக்கல் உண்டாயிருந்திருக்குமென்பது திண்ணம். இவ்வார்த்தைகளை மொழியும்போது இவர் சேசுக்கிறீஸ்துநாதரின் பதிலாளி என்றெண்ணுமல் இவரே கடவுளென் றெண்ணப்பட்டது.

எங்கள் ஞானத்தந்தையின் அமிர்தவாக்கை சிறமேற்கொண்டு, தமது சுய அலுவலை எல்லாம் விட்டுவிட்டு தொலைதூரத்திலிருந்து எங்கள் மத்தியில் வந்து ஞான ஒடுக்கம் கொடுத்த குருவானவர் மட்டில நாமகள் எல்லோரும் மெத்த நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறோம். மறு வருடத்திலும் எமகள் மத்தியில் வந்து இவ்வித ஞான அறிவை மென்மேலும் புகட்டுவாரேயாகில் எங்களுக்கு சொல்லொண்ணு புகழ்ச்சியுண்டாகும். இரக்கம் நிறைந்த கடவுள் இவருக்கு நீடிய ஆயுளை தந்து எமகளைப்போல் பாவத்தில் புரண்டிருக்கும் மற்றும் தேசத்தாருக்கும் நற்புத்தி மதிகளை போதிக்க கடவுள் ஆசீர்புரிவாராக. எங்களுக்கு செய்த நன்றிக்கு எவ்வித நன்கொடையும் கைம்மாருக கொடுக்க இயலாதபோனுலும் நாமகளெல்லோரும் சிரஞ்சாய்த்து இருகரம் குவித்து வந்தனம் புரியலானோம்.

9வ- அமலோற்பவ அர்ச். லூர்தாண்டவளின் திருவிழா கொண்டாடப்பட்டது. இரண்டாவது பூசை மேற்றிராணியாராகிய மிகவும் வந். டி. விஸ்மாரா ஆண்டவரவர்களால் செய்யப்பட்டது. முதலாவது, இரண்டாவது பூசையில் கணக்கற்ற ஆணும், பெண்ணும், பிள்ளைகளும் தேவநற்கருணையை உட்கொண்டார்கள். அநேக சிறுபிள்ளைகள் புதுநன்மை வாங்கினுர்கள். மாலை $6\frac{1}{2}$-மணிக்கு சுற்றுப்பிரகாரம் துவக்கிற்று. இதன் சிறப்போ சொல்லத் தரமல்ல. ஆயிரக்கணக்கான ஆணும் பெண்ணும் முன்னும் பின்னும் செல்ல மத்தியில் பரிசுத்த திவ்யநற்கருணையை மேற்றிராணி ஆண்டவரவர்கள் கையிலேந்திக்கொண்டு குருப்பிரசாதிகளுடன் புடைசூழ்ந்து நடந்து எண்ணக்கூடாத விளக்குகளாலும, விசித்திர வேலைகளாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த செண்ட் மேரிஸ் கம்பவுண்டில் ஸ்தாபித்திருக்கும் அர்ச். லூர்துமாதா கெபிக்குச் சென்று ஓர் நண்பரால் கட்டி முடித்திருக்கும் பலிபீடத்தில் தேவநற்கருணையை ஸ்தாபகஞ் செய்த உடன் பிரசங்கியாருக்காக அமைக்கப்பட்டிருந்த மேடையில் பிரசங்கியார் ஏறிநின்று அமலோற்பவ அர்ச். லூர்தாண்டவளைக் குறித்து பிரசங்கிக்கலாயினர். வானத்தில் கருமேகம் படர்ந்த உடன் எவ்விதமாக மாரி வருஷிக்கிறதோ அவ்விதமாக ஆண்டவளைக்குறித்துப் பொழியலானுர். நேத்திரத்தை நாலாபக்கத்திலும் திருப்பிபார்க்க புகுந்தபோது இவ்விடம் பிரான்ஸ் நகருக்கொப்பாகவும், இக்கெபி மசேபியெல் கெபிக் கொப்பாகவும், வீற்றிருக்கும் திருச்சுரூபம் சிற்பியால் செய்ததென்றெண்ணுமல் மெய்யாகவேபரிசுத்த தேவ தாயார் வானமண்டலத்திலிருந்து எழுந்தருளிவந்து வீற்றிருக்கிறுப்போலவும் தோன்றிற்று. பிரசங்கம் முடிந்தபிறகு தேவநற்கருணை ஆசீரளிக்கப்பட்டது.

தளரா ஊக்கத்துடன் ஆங்காங்கு சென்று சிறு பிள்ளைகளுக்கு ஜெபங்களைக் கற்றுக்கொடுத்து புதிய நன்மைவாங்க உழைத்த அர்ச். ஐந்து காய பிராஞ்சீஸ் சுதேச கன்னிகைகளுக்கு கடவுள் நீடிய ஆயுளையும் ஆசீரையும் அளிப்பாராக. சென்ற வருடம் இம்மடத்தில் காலஞ்சென்ற கன்னியாஸ்திரீ கர்லீனம்மாளுக்கு கிடைத்த பாக்கியங்களெல்லாம் இவர்களுக்கும் கிடைத்து அந்த அம்மாளடையப்பெற்ற ஜூபிலி சுபதினங்களெல்லாம் இவர்களும் பெற கடவுள் கருணை புரிவாராக.

அமலோற்பவ அர்ச். லூர்தாண்டவளின் திருவிழாவும் சற்பிரசாதசுற்றுப்பிரகாரமும் எங்களுக்கு இவ்வருடம் கிடைத்த பாக்கியமே பெரும் பாக்கியம். சேசு இரட்சக பெருமானுக்கு ஸ்துதியுஞ் ஸ்தோத்திரமு முண்டாகக் கடவது.

செக்கந்திராபாத் தக்கன். 14—12—17.	இங்ஙனம், துடர்வண்டி எக்காளம் பூவர் மட் போர்ட்.

நாகப்பட்டணம்.

ஐயா,

ஷெ யூர் விசாரணை குருவாகிய கனம் சங். கொயிலோ சுவாமியாருடைய அன்புள்ள பராமரிப்பில் இந்தியகத்தோலிக்கர்களுக்கு சென்ற வாரம் 10-ந் தேதி துவங்கி 16-ந் தேதிவரையில்

ஓர் பொது ஞானத்தியானம் அளிக்கப்பட்டது. தியானம் கொடுத்தவர் திருச்சி கனம் சங். ரோச் சுவாமியார் அவர்கள். இந்த 5 நாட்களிலும் அவர் செப்பிய அமிர்த பிரசங்கங்களை கேட்ட அநேக நூற்றுக்கணக்கான ஜனங்கள் யாவரும் மனங்களித்து, அவர் சொன்ன புத்திமதிகளை எல்லாம் கேட்டு தங்களுடைய பாவவழியை விட்டு மோட்ச பாதையில் நடக்க முயன்று நல்ல பிரதிக்கினை செய்தார்கள். இதற்கு அத்தாட்சியாக 15-ந் தேதி சாயந்தரம் அநேகர் பொதுப் பாவ சங்கீர்த்தனம் செய்து மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திவ்விய பலி பூசையில் எல்லோரும் திவ்விய பந்தியில் அமர்ந்தார்கள். இவ்விசேஷித்த கிருபை இதுவரை நாகப்பட்டணத்திற்கு கிடைத்ததில்லை. இதைப்பற்றி முதலாவது இவ்வூர் பங்குவிசாரணை சங். கொயிலோ சுவாமியார் அவர்களுக்கும் அவருடைய அரியதுணை குருவாகிய சங். பயூஸ் சுவாமியார் அவர்களுக்கும், இரண்டாவது மிக்க உற்சாகமாயும், வாய்ச்சாலமாயும், சாமர்த்தியமாயும் பிரசங்கித்து ஜனங்களுடைய ஆத்தும காரியத்தை சீர்படுத்திய கனம் சங். ரோச் சுவாமியார் அவர்களுக்கும் இவ்வூராருடைய அன்பான நன்றியறிந்த தோத்திரங்கள். இச்சற்குருக்கள் இன்னம் பல்லாண்டு சீவித்து சகல ஜன ஆத்தும இரட்சண்ணியத்திற்காக உழைத்து வரும்படி சேசுவின் திரு இருதயம் அவர்களை ஆசீர்வதிப்பதாக.

ஓர் நாகைவாசி.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாச்சாரம்.

போல்தேசத்துப் பிள்ளைகள்.—இவர்களுக்குள் பெருந் தொகையானோர் கைதிகளாக்கப்பட்டு ஜெர்மன் தேசத்தில் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் பரிசுத்த தந்தை 15-ம ஆசீர்வாதப்பருடைய சிபாரிசின்மேல் இவர்களெல்லோரும் விடுதலையாகி ஸ்விட்ஜர்லாந்து தேசத்துக் கனுப்பப்பட்டிருக்கிறார்கள்,

ஸ்பேயின் தேசத்தரசர்.—13-ம் அல்போன்ஸ் என்னப்பட்ட இவ்வரசரும் பாப்பரசராகிய 15-ம் ஆசீர்வாதப்பரைப்போல் நிகழும் யுத்தத்திற் காணுமற்போனவர்களைக் கண்டுபிடிப்பதில் மிக கவலையும் பிரயாசையு முடையவரா யிருக்கிறார். இந்த வேலைக்காக தம்முடைய அரண்மனையில் 20 குமஸ்தாக்களை நியமித்து அவர்களோடு தாமும் மிக்க உற்சாகமாய் உழைத்து வருகிறார்

ஓர் வீரசூரர்.-கார்டன் என்னும் பெயருடைய இவர் ஓர் கத்தோலிக்கு சேனைதிபதி. சில வருடங்களுக்குமுன் சோமாலிலாண்டில் நடந்த சண்டையில் இவர் தம்முடைய ஓர் கண்ணை யிழந்தார். தற்போது நடக்கும் யுத்தத்தில் ஓர் கையை யிழந்தார். அதன் பிறகு ஏழுதரம் காயம்பட்டார். இவருடைய வீரசூரத்தின் நிமித்தம் இவருக் கநேக விருதுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

ஓர் குறை நிவர்த்திக்கப்பட்டது— உலகத்திலுள்ள எல்லா தேசத்தாரும் ஒரே வித காலண்டரைக் கொண்டவர்களாயிருக்க, ருஷியாதேசத்தார் மாத்திரம் இதில் வித்தியாசப்பட்டு இரண்டுவாரம் பின்னிடைந்து துவக்கும் வருஷ காலண்டரைக் கொண்டிருந்தார்கள். புது ருஷியா இக்குறையை நீக்கி மற்ற தேசத்தாருடைய காலண்டரை யனுசரிக்கத் தலைப்பட்டிருக்கிறது.

பாவம், ஏமார்ந்துபோனார்கள் —ருஷிய சக்கரவர்த்தினி நிகழும் யுத்தந் தொடங்குவதற்குமுன் இரண்டுகோடி பவுன் மதிப்புள்ள தம்முடைய சொந்தநகைகளை மாரிகாலத்தில் தாம்போய்த் தங்கும் அரண்மனையில் பத்திரப்படுத்தி வைக்கும்படி அனுப்பியிருந்தாராம். இதையறிந்த இராஜாங்க புரட்சிக்காரர் இந்நகைகளை அவ்விடத்தில் தேடிப்பார்த்தபோது அவைகள் அகப்படவில்லையாம்.

நாளொன்றுக்கு 7½ கோடி சுருட்டு செலவு.—இத்தனை கோடி சுருட்டு பிரதிதினமும் இங்கிலீஷ் இராஜ்ஜியத்தில்மாத்திரம் செலவாகின்றனவென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இக்கணக்கின்படி ஒருவன் ஒருநாளைக்கு சராசரி 4 சுருட்டு பிடிக்கிறான். அன்றியும் சிகரட்டு ரூபமாய் செலவாகிற புகையிலை 100 டன்களுக்கு அதிகமென்று சொல்லப்படுகிறது.

புதையல் ஒன்று—இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் போகும் வழியில்

கடலில் ஓர் இடத்தில் நகைகளும் தங்கக் கட்டிகளும் புதைப்பட்டு கிடக்கின்றன வென்றும், அப்புதையல் எண்ணூறுகோடி பவுன் பெறுமானதாக நிச்சயிக்கப்பட்டிருக்கிற தென்றும் சொல்லப்படுகிறது. இப்புதையலைக் கண்டுபிடித்தவன் அதை எப்படி கண்டுபிடித்தானோ வென்பது தான் ஆச்சரியம்.

மீன்களின் வேகம்.—டால்பரின், பார்பாயில் என்று சொல்லப்படும் மீன்கள் மணி ஒன்றுக்கு 17, 18-மைல் தூரம் போகுமென்றும், திமிங்கிலம் சாதாரணமாய் 4, 5-மைல் போகுமென்றும், ஆனால் கோப மூட்டப்பட்டாலோ அது 18, 20-மைல் போகுமென்றும், சில நீர்ப்பாம்புகளும் இதே தூரம் போகுமென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் பானிடேயென்ற ஓர் வித மீனோ 40-மைல் தூரம் செல்லுமாம்.

முதல் நீராவிக் கப்பல்.—1842-ம் ஆண்டு செப்டம்பர்மீ 24உயில் தான் முதன் முதல் ஒரு கப்பல் நீராவி சக்தியால் ஓடத் துடங்கிற்று. அன்று அந்தக் கப்பல் இங்கிலாந்திலுள்ள சௌதாம்டன் துறைமுகத்திலிருந்து கல்கத்தாவுக்குப் பிரயாணமாகப் புறப்பட்டு 91-நாட்களில் கல்கத்தாவை அடைந்தது. இந்த 91-நாட்களில் அது நீராவியின் சக்தியினால் ஓடினதெல்லால் 60-நாட்களே.

மனந்திரும்பல்.—சமீபத்தில் கல்வியிற் தேர்ந்த அநேக ஆங்கிலேயர் தாங்கள் தழுவிவந்த புரோடஸ்டாண்டு மதத்தை விட்டு கத்தோலிக்குத் திருச்சபையிற் சேர்ந்தார்கள். இவர்களுக்குள் சிட்னி, கத்பெர்ட், ரோலாண்ட், வில்லியம்ஸ், காக்ஸ் என்பவர்கள் பாதிரிமார்கள் ஆவர். கடைசியிற் கூறப்பட்ட காக்ஸ் என்பவர் மான்செஸ்டர் நகரின் பதித மேற்றிராணியாருடைய குமாரரா யிருப்பதுமன்றி கல்வியிற் சிறந்த ஓர் சிரோன்மணியுமா யிருக்கிறார்.

ஓர் மாற்றம்—கிரீக் கிறீஸ்துவர்கள் ஆதிகாலந்தொட்டு கத்தோலிக்கரா யிருந்துவந்தார்கள். ஆனால் 1043-ம் ஆண்டில் இவர்களுக்குள் கோடிக்கணக்கான பேர் சில துஷ்டருடைய துர் ஆலோசனைக் கிடங்கொடுத்து, திருச்சபையின் தலைவராகிய பரிசுத்த பாப்பானவரை அங்கிகரியாமல், பிரிவினைக்காரராய்ப் போனார்கள். அது முதற்கொண்டு கான்ஸ்தாந்திநோபில் இப்பிரிவினைக்காரருடைய அதிமேற்றிராசன நகரமாயிருந்தது. இப்போதோ இது கத்தோலிக்கு மேற்றிராசன நகரமாக மாறி விட்டது. இம் மாற்றம் உண்டானது 1912-ம் வருஷத்தில். இப்படியே ருஷியா தேச முழுதும் பரிசுத்த பாப்பானவருடைய ஆளுகைக்குட்பட்டு அது ஓர் நல்ல கத்தோலிக்கு தேசமாயிருக்க வேண்டிக் கொள்வோமாக.

வேனிஸ் நகரம்.—இத்தாலியாவிலுள்ள இந்நகரம் நிகழும் யுத்தத்தின் காரணமாய் வெறுமையாகி வருகின்றது. பீரங்கி குண்டுகளினால் சேதப்படாமல் பிரதிமைகள் செங்கல்களால் மூடப்பட்டும், புராதன கட்டிடங்கள் மணற்கோணிகளால் பாதுகாக்கப்பட்டும் இருக்கின்றனவாம். பல கடைகள் மூடப்பட்டிருக்கின்றன. தோணிகள் இருந்த இடந்தெரியாமல் எங்கேயோ ஓடிப்போயிருக்கின்றன. ஒன்றறை இலட்சம் பேருள்ள இப்பட்டணத்தில் இப்போது ஆயிரம்பேர் மாத்திர மிருக்கிறார்களென்றும், ஆகாயப்படையால் இதுவரை அவ்வளவு சேதம் ஏற்படவில்லை யென்றும் வதந்தி.

திருச்சபையின் புதுச் சட்டம்.—இச்சட்டத்தின் 1108-வது அம்சப்படி கலியாணத்துக்காக விலக்கப்பட்டிருந்த காலம் இப்போது குறைவுபட்டிருக்கிறது. இது வரையிலும் ஆகமன காலத்திலிருந்து மூன்று இராசாக்கள் திருவிழாவரையிலும், விபூதித் திருநாளிலிருந்து கர்த்தர் உயிர்த்த திருநாளுக்குப் பின்வரும் முதல் ஞாயிறு வரையிலும் கலியாணத்துக்கு விலக்கப்பட்ட காலமாயிருந்து வந்தது. இனிமேற்பட இக்காலம் ஆகமன காலத்திலிருந்து கர்த்தர் பிறந்த திருநாளோடும், விபூதித் திருநாள் முதற்கொண்டு கர்த்தர் உயிர்த்தத் திருநாளோடும் முடிவுபெறும். ஆகையால் 21-நாள் குறைவு பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் இச்சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது.

ஓர் புது மேற்றிராணியார்.—நிகழும் கொடிய யுத்தத்தில் பிராஞ்சு போர்முனையில் அநேக பிராஞ்சு குருக்களும் இன்னும் பிராஞ்சு மேற்றிராணிமார்களும்

போர்ச் சேவகர்களைப்போல் போர்புரிந்து வருகிறார்களென்பது யாவருக்குந் தெரிந்த விஷயம். கடந்த அக்டோபர் மாதம் ஷெ போர்முனையிலிருந்து திரும்பிவந்த சங். பியோமோன்ட் (Beaumont) சுவாமியாரவர்கள் தற்போது போர்போன் தீவிலுள்ள ஒரு பட்டணத்துக்கு மேற்றிராணியாராக அபிஷேகஞ் செய்யப்பட்டிருக்கிறார். அபிஷேகத்தின் பொழுது இவருடைய தகப்பனாரும், தாயாரும், பாட்டியாரும் பிரசன்னமாயிருந்ததுமன்றி இவருடைய முதல் ஆசீர்வாதத்தைப் பெறவும் பாக்கியம் பெற்றார்கள்.

செல்வச் செருக்குள்ள தேசம் வட அமேரிக்கா.—இக்கொடிய யுத்தந் தொடங்கினது முதல் உலகத்திலுள்ள ஏறக்குறைய எல்லா இராச்சியங்களும் அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தாரிடத்தில் கடன் வாங்கியிருப்பதாகத் தெரியவருகிறது. இவர்கள் இங்கிலாந்துக்கு 113-கோடி டாலரும், (ஒரு டாலர் சுமார் 3-ரூபாயாகும்) பிரானசுக்கு 65-கோடி டாலரும், ருஷியாவுக்கு 12-கோடி டாலரும், இத்தாலியாவுக்கு $2\frac{1}{2}$-கோடி டாலரும், ஜெர்மனிக்கு ஒரு கோடி டாலரும், கனடாவுக்கு 29-கோடி டாலரும், நியூபவுண்டுலாந்துக்கு $\frac{1}{2}$-கோடி டாலரும், சீனாவுக்கு ஒருகோடி டாலரும், யுத்தத்தில் தலையிட்டுக்கொள்ளாமல் ஐரோப்பாவில் நடு நிலைமையிலிருக்கும் இராஜ்யங்களுக்கு $2\frac{1}{2}$-கோடி டாலரும், தென் அமெரிக்காவுக்கு 11-கோடி டாலரும் கடன் கொடுத்திருக்கிறார்களாம். ஆகையால் வட அமெரிக்கா எவ்வளவு செல்வச்செருக்குள்ள தேசமென்று சொல்லலாம்!

ஓர் பாக்கியமான மரணம்.—தற்போது நடக்கும் கொடிய யுத்தத்தில் போர்ச்சேவகன் ஒருவன் தன்னுடைய அரண்குழியில் வந்து விழுந்து வெடித்த ஒரு குண்டினால் அதிலேயே புதைபட்டான். இதைக் கண்ட வேறொரு சேவகன் இவனுக்கு உதவியாக ஓடிவந்து மண்ணைத்தோண்டி இவனைக் குழியிலிருந்து வெளிப்படுத்த பிரயத்தனப்படுகையில், வயிறு முதற்கொண்டு பாதங்கள் வரையிலும் இவனுடைய அவயவங்கள் நொருங்கி நசுங்கி யிருந்தபடியால், இவனை அவ்விடத்திலிருந்து அப்புறப் படுத்துவது அசாத்தியமென்றுணர்ந்து "இங்கே குருவானவர் இல்லையோ?" என்று விசாரிக்க, உடனே ஒரு குருவானவர் ஓடிவந்து இவனுக்கு கடைசி தேவத்திரவிய அனுமானங்களை யெல்லாம் நிறைவேற்றினார். பிறகு இவனை நோக்கி "நேசனே! உனக்குச் சில ஜெபங்களை வாசிக்கப்போகிறேன்." என்றதற்கு "சுவாமீ, என் இருதயத்தி லெழுந்தருளி வந்திருக்கிற என் நல்ல சேசுவோடு சம்பாஷித்துக் கொண்டிருக்கிறேன்" என்று சொன்ன சில நிமிஷங்களுக்கெல்லாம் உயிர் துறந்து தன் இரட்சகர்பாதம்போய்ச் சேர்ந்தான்.

ஜெருசலேம்.—கிறீஸ்துவர்களுக்குப் புண்ணிய க்ஷேத்திரமாகிய இந்நகர் கடந்த 830 வருடங்களாய் துருக்கி அரசாட்சிக்குட்பட்டிருந்து தற்போது ஆங்கிலேய அரசாட்சிக் குட்பட்டிருப்பது உலகமடங்கிலுமுள்ள கிறீஸ்துவர்களெல்லோருக்கும் மிக்க மனோகரமான சமாச்சாரமென சொல்லத்தேவையில்லை. சமீபத்தில் சர் எட்மன்ட் ஆல்பே என்னும் ஆங்கிலேய ஜெனரல் அவர்கள் ஜெருசலேம் பட்டணத்தைக் கைப்பற்றினர். இச்சுப செய்தியைக் கேள்வியுற்ற நமது சக்கரவர்த்தியவர்கள் லண்டன் பட்டணத்திலிருந்து ஷெ ஜெனரலுக்குத் தம்முடைய சோபன வாழ்த்தலை தந்தியின் மூலமாய் அனுப்பி வைத்தனர். அன்றியும் லண்டன் பட்டணத்திலுள்ள கத்தோலிக்கு அதிமேற்றிராசனக் கோவிலிலும் புரோடஸ்டாண்டு மேற்றிராசனக் கோவிலிலும் "தேதேயும்" எனும் தேவதோத்திரக் கீர்த்தனை பாடப்பட்டதுடன், யுத்தந் தொடங்கினது முதல் கத்தோலிக்கு அதிமேற்றிராசனக் கோவிலில் அடிபடாதிருந்த பெரிய மணி இச்சமயத்தில் அடிக்கப்பட்டது.

அர்ச். மரியம்மைப் பதிகம்.—இப்பதிகம் திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலை சங். கேயுஸ் சுவாமிகளின் உத்தரவின்படி ஷெயூர் எச். சி. கோ. உயர்தரப் பெண் பாடசாலை தமிழ்ப் பண்டிதர். எம். எஸ். மணியன் பிள்ளை யவர்களால் இயற்றப்பெற்றது. பிள்ளையவர்கள் சென்றமீ 13வ சென்னை, மண்ணடிக் கடுத்த அர்ச். சவேரியார் கோவில் ஆங்கிலேய பாடசாலையின் ஹாலில் இவ்விடத்

திய பிரபல வியாபாரியும் எவ்விஷயத்திலும் முன்னுக்கு நின்று குருக்களுக்குதவி புரிபவருமாகிய ம-௱-௱-ஸ்ரீ தி. ம. மாணிக்கம்பிள்ளை யவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, ஷை பதிகத்தில் பாடியிருக்கிறபடி "தேவமாதா" என்னுஞ் சொல் ஏழை, அடையாளங்கள், அறிவு, செல்வம், பெருமை, மகத்துவம் முதலிய பொருள்கள் கொண்டிருக்கின்றனவென்று மிக்க மாதுரியமாயும் சாதுரியமாயும், ஏறக்குறைய ஹால் நிறைய வந்திருந்த ஜனங்கள் கேட்டு களிக்குமாறு பதிகத்தின் ஒவ்வொரு அடியையும் பாடி வியாக்கியானித்து உபந்நியாசித்தார்.

பாப்பரசும் பிராஞ்சு அரசாங்கமும்.—வெகுகாலமாய் இவ்விரு அரசாங்கங்களுக்கு முண்டாயிருந்த மந்திரித்துவம் (Diplomacy) காலஞ்சென்ற பரிசுத்த தந்தை 10-ம் பத்திநாதர் காலத்தில் ரத்து செய்யப்பட்டது. அதெப்படியெனில் பிராஞ்சு தேசத்தின் பிரஜாதிபதி ஷை பாப்பானவரை அவமதித்து அதுவரையிலும் இவ்விரு அரசாட்சிகளுக்கு மிருந்து வந்த சட்டதிட்டங்களை மீறி, உரோமாபுரியிலிருந்த தம்முடைய ஸ்தானாதிபதியை தம்மிடத்துக்கு அழைத்துக் கொண்டார். இப்பேர்ப்பட்ட அநீதமும் அக்கிரமமும் நடக்க "பிரிமேசன் சபை" என்று வழங்கிவருகிற தலைவெட்டி வேதக்காரரே முக்கியகாரணம். ஆயினும் பிராஞ்சு தேசத்து ஜனங்கள் இந்த நிஷ்டூர யுத்த காலத்தில் தங்கள் தேசத்துக்கும் உரோமாபுரிக்கும் மந்திரித்துவம் இல்லாததினால் உண்டாயிருக்கும் பல குறைகளையும் அசௌகரியங்களையும் உணர்ந்தவர்களாய், தங்களுக்குள் மதபேதம், கட்சி, குழப்பம் ஆகிய இவைகளெல்லா மிருந்து வந்தபோதிலும், இவைகளைச் சிறிதும் பாராட்டாமல், ஒருமனப்பட்டு ஒருமித்து தங்கள் தேசத்துக்கும் உரோமைக்கு முண்டாயிருந்த சம்பந்தம் மறுபடியும் முண்டாக மந்திரித்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டுமென தங்கள் அரசாங்கத்தாருக்கு மனுசெய்ய பிரயத்தனஞ் செய்து வருகிறார்கள். இது அனுகூலமானால் நம்முடைய சத்திய திருச்சபைக்கு அத்தேசத்தில் கணக்கற்ற நன்மைகளுண்டாகுமென்று நம்ப இடமுண்டு. பதிதரும், பிரிவினைக்காரரும், இன்னும் அவிசுவாசிகளுமான மற்ற இராஜாங்கத்தாரும் தங்கள் ஸ்தானாதிபதிகளை அர்ச். பாப்பானவரிடம் அனுப்பியிருக்கையில், திருச்சபையின் சிரேஷ்ட புதல்வியென்று பெயர்பெற்ற கத்தோலிக்குத் தேசமாகிய பிராஞ்சு தேசம் திருச்சபையின் தலைவரை விட்டொதுங்கி தூரத்திலிருப்பதைப்பற்றி நாம் என்ன சொல்வோம்!! அத்தேசத்துக்கு இது எவ்வளவோ குறைவு! இது எவ்வளவோ நஷ்டம்!! பிரிமேசனரால் தங்கள் தேசத்துக் குண்டான கேடுபாடுகளைத் தாங்களே நிவர்த்தி செய்துகொள்ளக் கடவார்களாக. இக்காரியம் இவர்களுக்கனுகூலமாகும்படி நாமும் வேண்டிக்கொள்வோமாக.

கிறீஸ்துவர்களுக்கு இது ஓர் நல்ல எச்சரிக்கை.—ஐதராபாத் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சுவாமியார் ஒருவர் தம் விசாரணைக்குட்பட்ட ஒரு கிராமத்தில் கோவிலொன்று கட்ட சாமான்கள் சேகரித்து பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு வந்தார். ஒருநாள் இராத்திரி சில அஞ்ஞானிகள் இந்தச் சாமான்களைத் திருட வந்து தூலங்களிற் சிலவற்றைத் தூக்கிக்கொண்டு போகையில், அவர்களை உபதேசியும் இரண்டுபேர் கிறீஸ்துவர்களும் கைப்பிடியாய்ப் பிடித்துச் சுவாமியாரிடங் கொண்டுபோகவே, இக்கேசு போலீசுக்குத் தெரிவிக்கப்பட்டது. பிறகு முனிசீப் முன்னிலையில் இக்கேசு விசாரணையாகையில் அந்த அஞ்ஞானிகளிடத்தில் லஞ்சம் வாங்கிக்கொண்டிருந்த ஷை கிறீஸ்துவர்களில் ஒருவன் முனிசீபு கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தனக்கு ஒன்றுந் தெரியாதென்றும், தான் ஒன்றையும் பார்க்கவில்லையென்றும் ஒரே சாதனையாய்ச் சாதித்தான். இவன் இவ்வாறு சாதித்ததுதான் தாமதம். பாவம்! உடனே இவனுக்குப் பயங்கரத்துக்குரிய ஓர்வித நடுக்கம உண்டாகி நிற்க முதலாய்ச் சக்தியின்றி மகா கஷ்டத்துக்குள்ளாகவே, கேசை நடத்த முடியாமல் அதைத் தள்ளிவைக்க நேர்ந்தது. இவனே இந்த நடுக்கத்தினால் வெகு வாதனைப்பட்டனுபவித்ததுமன்றி நடமாட முதலாய் முடியாமல் ஒருமாத காலமள

வும் பாயும் படுக்கையுமாய்க் கிடந்தது எல்லோருக்கும் பரிதாபமாயிருந்தது. இம்மத்தியில் ஷெ சுவாமியார் அவ்வூருக்கு ஓர் தடவை போனபோது இவனை அவரிடம் தூக்கிக்கொண்டு போனார்கள். அப்போது இவன் சுவாமியாரைப் பார்த்து "சுவாமீ, நான் பெரிய பாவத்தைக் கட்டிக்கொண்டேன். உண்மையைச்சொல்ல சர்வேசுரன் சந்நிதானத்தில் வாக்களிக்கிறேன் சுவாமீ" என்றான். பிறகு கேசு விசாரணைக்கு வந்தபோது இவன் கோர்ட்டுக்குத் தூக்கிக்கொண்டு போகப்பட்டு நடந்ததை நடந்தபடியே சொன்னான். இவன் இப்படி உண்மையை உரைத்த மாத்திரத்தில், என்ன ஆச்சரியம்! இவனுக்குண்டாயிருந்த நடுக்கமும் நின்றது, இவன் எழுந்து நின்று அடி எடுத்துவைத்து நடக்கவும் கூடுமாயிருந்தது. பொய்ச்சத்தியஞ் செய்கிறவர்களுக்கும், பொய்ச்சாட்சி சொல்லுகிறவர்களுக்கும் இது ஒரு நல்ல எச்சரிக்கையாயிருக்கட்டும்.

நமது சக்ரவர்த்தியைப்பற்றிய கதை—பின்வரும் கதை தமிழர் நேசன் என்னும் பத்திரிகையிற் காணப்படுகிறது. நம்மையாளும் மாட்சிமைதங்கிய நமது சக்ரவர்த்தியைப்பற்றி ஒருகதை கூறுவதுண்டு, அது மெய்யோ பொய்யோ அறியோம். அவர் பள்ளியில் மற்ற சாதாரண பிள்ளைகளுடன் படித்துக்கொண்டிருக்கையில், சில்லறைச் செலவுக்கென்று பெற்ற பணம் செலவாகிப்போகமேலும் பணமனுப்பும்படி தமது பாட்டியாரான விக்டோரியா மகாராணியார்க்குக் கடிதம் எழுதினராம். மகாராணியார், பதில் பணம் அனுப்பாமல், வீண் செலவு செய்யாமல் செட்டாயிருக்க வேண்டுவதைப்பற்றித் தமது அருமைப் பேரனுக்கு ஒரு பெரிய கடிதம் எழுதி அனுப்பினராம். அதற்குப் பேரர் பதிலனுப்பியதாவது:—"எனது அருமைப் பாட்டியாரே! தாங்கள் தயவு செய்தனுப்பிய கடிதத்துக்காக அநேக வந்தனம், அதை, நான் இங்கே ஒருவருக்கு ஐந்து பவுனுக்கு விற்றுப் பணம் சம்பாதித்துக் கொண்டேன். இனி, பணம் அனுப்பாத போதெல்லாம், தங்கள் கைப்பட இவ்விதமான பெரிய லிகிதங்கள் அனுப்புவது எனக்குச் சௌகரியமே!" என்பதேயாம்.

பேர்போன ஓர் பிரசங்கி—அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் சங். வால்ராத் என்னும் சேசு சபை குருவானவரான இவர் நாளது மீ 13உயிலிருந்து 27உ வரையிலும் சென்னை அதிமேற்றிராசன ஆலயத்தில் காலையில் 7-மணிக்கும் மாலையில் $6\frac{1}{2}$-மணிக்கும் நேர்த்தியான வேத விளக்கப் பிரசங்கங்கள் செய்வார். இப்பிரசங்கங்களைக் கேட்க கிறீஸ்துவர்கள் மாத்திரமல்ல, ஆனால் அநேக அஞ்ஞானிகளும் பதிதர்களும் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. சங்கைக்குரிய சுவாமிகளின் பிரயாசை வீண்போகாமல் அநேக ஆத்துமங்கள் பயனடையுமாறு வேண்டிக்கொள்வோமாக.

யுத்தச் செலவு.—நமது பிரிட்டிஷ் இராசாங்கத்தாருக்கு நிகழும் யுத்தத்தின் பொருட்டு தினமொன்றுக்கு 70 லட்சம் பவுன் செலவாகிறதென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

அரைக் கலத்துக்கு மேற்படாத விளம்பரம் ஒன்றுக்கு 2-ரூபாயும், முழுக்கலத்துக்கு 4-ரூபாயுமாக முன்பணம் அனுப்பினாலன்றி, குடும்ப சுபாசுப விளம்பரங்கள் பிரசுரிக்கப்படமாட்டா. ப—ர்.

நன்மரண அறிக்கை.

ஸ்ரீமான் சின்னத்தம்பி தவத்த கோம்ஸ் அவர்களின் நன்மரண அறிக்கை.

செந்தமிழாகிய நற்றமிழ் கடலில் இலக்கணத்தோணியேறி யுலாவி யிலக்கிய மென்று சொல்லப்படுங் கரையைக் கடந்து கவி வழி நடந்து பன்னாள் சினையாப்பல நூலணையாத் தரித்த நாவலர் கூட்டம் நிறைந்திருக்கும் பாண்டியநாட்டின்கண் பண்படும் சிறப்பும் அழகும்

பொருந்திய தவோ மகிமைவாய்ந்த தருமந்தவிரா திருமந்திர நகரென்னுந் தூத்துக்குடியில் பூர்வீகம் அஸ்தினுபுரியை யாண்ட வணங்காமுடி மன்னன் மறைவழியுதித்த ஸ்ரீமான் சின்னத்தம்பி தவத்தகோம்ஸ் அவர்கள் பொன்விளையும் நாடும் இராவணன் தீவுமாகிய இலங்கையின் தென்பாரிசமாகிய கலுத்துறையில் காலஞ்சென்ற பாரிய வர்த்தகரும், பிரபல வியாபாரியுமாகிய ஸ்ரீமான் P. P. கொறேரா அவர்கள் ஷாப்பில் உத்தியோகம் பார்த்து வருங்கால், 1917ஆ டிசம்பர்மீ 3உ இரவு 9-மணிக்கு ஜெபமாலை ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, திடீரென்று தனக்குண்டான மார்வு அடைப்பால் மிக்க அவஸ்தைப்பட்டு தேர்ந்த வயித்தியர்களால் கைவிடப்பட்டு கிறீஸ்துவர்களுக்குக்குரிய தேவத்திரவிய அநுமானங்கள் யாவும் குறைவரப்பெற்று தமதருமை மனைவியையும் மூன்று மக்களையும் மற்றுஞ் சுற்றத்தாரையும் பரதவிக்க திருமந்திர நகரில் (தலமெல்லாம் தண்ணரும் மதி தன்னை கமலத்தாளின் மிதித்த "சந்தமரி தஸ் நேவிஸ்" அன்னையி னடைக்கலத்தில்) விட்டு உயிர் பிரியுமட்டும் நல்லறிவோடு "சேசுவின் திரு இருதயமே நின்கரத்தில் என் ஆத்துமாவை யொப்புக்கொடுக்கிறே"னென்ற வேதவாக்கை பன்முறை யுச்சரித்து, நன்மரணமானுர். இவரின் சடலம் மறு சாயரட்சை நாலு மணிக்குத் தக்க சிறப்போடும் வெகு ஜனத்திரளோடும் வழியெல்லாம்வேத கோஷ்டம் அமரிக்கையோடு முழங்க மெல்ல மெல்லக்கொண்டு சவக்காலையில் நல்லடக்கம் பண்ணப்பட்டது. அந்தோ! இவ்வுத்தம புருஷர் தேவமாதாவின் பிரிய ஊழியனுக உழைத்து வந்ததில் அவ்வூர் கிறீஸ்துவாகள் பொதுவாய் இவரை மாதாவின் பக்தனென்றழைப்பதுண்டு.

எல்லோரும் மானிடராவரோ—இப்புவில்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ—
திருப்புகழ்.

இதைகண்ணுறும்சகோதரர் சகோதரிகள் இவ்வாற்றும இளைப்பாற்றிக்காக ஒருபர. பிரி. திரி. வேண்டிக்கொள்ள இது பிரசுரிக்கப்பட்டது.

தூத்துக்குடி 15-17-12. } இங்ஙனம், பரிதாபப்படுவோன்.

உரிகம்.

புதுவை மாநகரில் சுமார் 400 வருஷங்களுக்கு முன்னதாகப் பட்டுநூல் பாளையக்கார வம்ஸபதியும் சத்திய கத்தோலிக்கருமான சந்தோஷம் எனப் பேர்கொண்ட ஒருவரிருந்தார். ஆனல் ஐயோ! அங்கிருந்த துலுக்கர், கிறீஸ்துவர்களை படுத்திவந்த கொடுமையால் கிறீஸ்துவர்கள் பலரும் பலவாருய்க் கலைந்தோடினுர்கள். அவருள் இவர் செங்கல்பட்டு ஜில்லாவையடுத்த வைப்பனை கிராமத்தையடைந்து அங்கேயே வாழ்ந்து வருங்காலில் மலையப்பன் என்னும் குமாரனையும், இவர் குமாரனுகிற சத்தியனுதனென்னும் தன் பேரனையும், இப்பேரனின் குமாரனுகிய பாப்பு என்பவரையும் கணுற்கண்டு களிக்கப்பாக்கியம் பெற்றதுமன்றி, இவரது விவாக விஷயமாய் சகலமும் ஏற்பாடுசெய்த பின்னரே மரணித்தார். இவ்வேற்பாட்டின்படியே பாப்புவென்பவர் செல்வம்மாளென்னும் பெண்மணியை மணந்து, யாகப்பன் ஆரோக்கியமரியமமாள் என்ற இருவரைப் பெற்றெடுத்தார்கள். ஷை யாகப்பனென்பவர் தமது 93-வது வயதில் 1917ஆ ஜுலைமீ 20உயில் நித்திய சமாதானத்தில் இளைப்பாறினுர். இவர் சகோதரியாகிய ஆரோக்கியமரியம்மாள் கபிரியேலென்னும் சுசீலனை மணம்புரிந்து, மிக்கேல், மரியண்ணன், அன்னம்மாள், மரியம்மாள் என நான்கு மக்களைப் பெற்ருர்கள். இவ்வரலாற்றை எழுதுமிச்சிறுவன் அன்னம்மாளின் குமாரன். இப்புண்யவதி தனது 30-ம் பிராயத்தில் தம் மக்களைவிட்டு 1894ஆ அக்டோபர்மீ 13உ பரலோகபதவி யடைந்தார்கள். பிறகு எங்களை மிக்கவன்போடும் அரவணைப்போடும் தாபரித்துக் காப்பாற்றினவர் ஆரோக்கியமரி யென்னுமெனது பாட்டியாரே. இவ்வம்மையை அன்னையெனக்கருதி அகமகிழ்ந்து வாழ்ந்துவரும் காலையில் தமது 94-ம் பிராயத்தில் பாலர்களைப் பரதபிக்கவிட்டு நிகழும் 1917ஆ நவம்பர்மீ 21உயன்று மறுலோகஞ்சென்ருர். இதை கண்ணுறும் சகோதரர்களே, சகோதரர்களான யாகப்பன், ஆரோக்கியமரியம்மாளென்னும் இவ்விருவருடைய ஆத்துமத்திற்காக பிரார்த்திக்கும்படி அடிபணிந்து வேண்டல் செய்யும்,

T. பிரான்சீஸ்.

கீழக்கரை.

இரட்சண்ய 1917-வது வருடம் நவம்பர்மீ 23உ வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு காலரா வென்னும் கொடிய வியாதியால் மரண மடைந்த எனது மனைவி மரிய ஆரோக்கியம்மாள் தல்மேய்தாவின் ஆத்தும இளைப்பாற்றிக்காக இதை வாசிக்கும், எக்குலச் சகோதரர்களும், எமது மதஇனைய நண்பர்களும் ஒரு. பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ளுமாறு மிகவுந் தாழ்மை யாய்க் கேட்டுக்கொள்ளும்

கீழக்கரை, 23-12-17. } S. P. Fernandez.

THE FAMOUS VICOMA SPECIFIC MEDICINES

IN MEMORY OF THE LATE REVD. FR. HASS S.J.,

For Headache, Neuralgia, Cough, rheumatism, paralysis, etc. (External application only.) } **VICOMA BALM** per tin As. 10/-

Apply to:—

M. P. KULANDAISWAMI PILLAI,
2/74, Broadway, *Madras.*

எமது மே அண்டு கம்பெனியில்
அடியிற்குறித்த சாமான்கள் வாங்க
மறவாதேயுங்கள்.



வெள்ளை டுவில் கமிசும் காக்கி கமிசும். ஒன்று ரூ $1\frac{3}{4}$, 2, $2\frac{1}{2}$, 3. கோடு விழுந்த கமிஸ்கள் ஒன்று ரூ 2, $2\frac{1}{4}$, $2\frac{1}{2}$, $3\frac{1}{2}$. சாப்ட் காலர் போலே, காலர், வெள்ளை டஜன் ரூ $3\frac{3}{4}$. வெள்ளை ஸ்டிப் காலர் டஜன் ரூ $3\frac{3}{4}$ வெள்ளை குட்டை டஜன் ரூ $2\frac{3}{4}$. கரை குட்டைகள் டஜன் ரூ $4\frac{1}{4}$ வெள்ளை பனியன் ஒன்று அணா 10, 12, ரூ 1. பட்டு ஆன்கர்சீப்டய், நெட்டிங் டய் ஒன்று அணா 12, ரூ 1, $1\frac{1}{2}$, 2. போடய் ஒன்று அணா 14 மேஜோடுகள் ஜதை அணா 12, ரூ 1, $1\frac{1}{2}$, 2. கிறேப் பனியன் ஒன்று அணா 8. கல்கத்தா அமடாபாட் கரை வேஷ்டிகள் ஜதை ரூ $4\frac{1}{2}$, 5, $5\frac{1}{2}$. சாயவேஷ்டிகள் ஜதை ரூ $3\frac{3}{4}$, $4\frac{1}{2}$, 5. கல்கத்தா அமடாபாட் கரைபுடவைகள் ரூ $3\frac{3}{4}$, $4\frac{1}{2}$, 5. புதுச்சேரி துணி சேலைகள் ஒன்று ரூ 5. காஞ்சிவரம் கொர நாட்டு பருத்தியும் பட்டும் கலந்த புடவைகள் ஒன்று ரூ 8 முதல் 25 வரை யிலு முண்டு. (நரை ரோமத்தை கருமையாக்கும் மார்ணிங் ஸ்டார் என்னும் கருப்பு பஷ்பம் ஒரு பெட்டியின் விலை ரூ 1. லெதர் பயின்டிங் செய்த பெல்ட் கேப்புகள் ஒன்று ரூ $3\frac{3}{4}$. (வேத சாமான்கள்) இருதய ஆண்டவர், தேவமாதா, சூசையப்பர் லூர்துமாதா, அந்தோணியார், $\frac{1}{2}$ அடி சுரூபங்கள் ஒன்று ரூ 3. 1 அடி சுரூபங்கள் ஒன்று ரூ 7. உத்தரியங்கள் குரோஸ் ரூ 4, 8. வாசனை சாம்பிராணி, பவுன் பாக்கட் அணா 12. இருதய மாதா படம் ஒட்டிய காலண்டர் ஒன்று அணா 2. இருதய ஆண்டவர் படம் ஒட்டிய காலண்டர் ஒன்று அணா 4
என்கிரேவிங், ரப்பர்ஸ்டாம்ப் டை முதலியவைகளும் துணிகளில் பீட ஜோடினைக்கு பல விதபுஷ்பங்களும் உண்டு. சுரூபங்களுக்கு சுத்தமாய் வர்ணம் செய்யப்படும். கமிஸ், காலர், பனியன் வேண்டியவர்கள் தங்களின் சைஸ் தெரிவித்தல்வேண்டும். தவிர விலாசம் திருத்தமாய் எழுத வேண்டும். பாக்கிங் சார்ஜ் பிரத்தியேகமுண்டு. அனுப்பும் சாமான்களை திருப்பிவிட்டால் திரும்ப வும் வாங்கப்படமாட்டாது.

Messrs. MAY & Co.,
21. Woods Road, Royapetta,
MADRAS.

அர்ச். அந்தோனியார் கோவில் கட்டிட தருமம்.

சென்னை, மவுன்ட்ரோட், "நேப்பியர்" சிங்காரத்தோட்டத்தருகாமையில் அர்ச். அந்தோனியார் பேரால் அவருடைய பக்தர்களின் உதவியைக்கொண்டு நாம் கட்டிவந்த ஷை கோவில் ஒருவாறு முடிவாகி, சென்ற டிசம்பர்மீ 23உ மிகவும் சங்கைக்குரிய எமது அதிமேற்றிராணியாரால் மந்திரிக்கப்பெற்று அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமையன்று அவரால் அவ்வாலயத்தில் பெரிய பாடற்பூசை செய்யப்பட்டதென்று மிக்கச் சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் இதனுல் ஷை உபகாரிகள் எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அர்ச். அந்தோனியாருடைய பக்தர்களே! இத்துடன் கோவில் வேலை முடிந்து போய்விட்டதென்று நினையாதீர்கள். தெய்வ பணிவிடைக்கேற்ற பூசைப் பாத்திரங்கள், பூசை வஸ்திரங்கள் முதலிய சாமான்கள் தேவையாயிருக்கின்றன. மேலும் பங்கு சுவாமியார் வசிக்க ஒரு சிறு விடுதியும் அவசியம். இவைகளுக்காக மதிப்பிடப்பட்டிருக்கிற தொகை குறைந்தது 2,000 நூக்கு மேலாகும்—ஆகவே, நீங்கள் இதுகாறும் எமக்குக் கைகொடுத்து உதவினதுபோல இப்பவும் உதவி செய்வீர்களென்று நம்பியிருக்கும்,

புதுப் பேட்டை, சென்னை. } உங்கள் நன்றியறிதலுள்ள சங். அருளப்பநாத சுவாமிகள்.

இதுவரையிலும் வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	4,595	3	6
Mr. A. டேவிட்	5	0	0
ஓர் நன்கொடை	5	0	0
Mr. F. C. சந்தியாகு பிள்ளை (பெரம்பூர்)	17	8	0
ஆக மொத்தம்,	4,622	11	6

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு சத்திரம்.

சென்னப்பட்டணத்தில் கத்தோலிக்கருக்கு ஒரு சத்திரம் தேவை யென்பது நெடுநாளாய் அனுபவித்துவந்த குறை. வெளியூரிலிருந்து வரும் கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்க விடமின்றி தவிக்கவேண்டியதாயிருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயம்.

இக்குறையை நிவர்த்திக்க மயிலாப்பூர் மேற்றிராணியாருடைய அநுமதியின்பேரில் சங். எல். எக்ஸ். பெர்நாந்திஸ் சுவாமிகளின் தலைமை வகித்து ஒரு கமிட்டி சென்னையி லேற்பட்டிருக்கிறது. இக் கமிட்டியாரால் சிறுகச் சிறுக இதுவரையில் சேகரித்திருப்பது ரூ. 1,140—15—0 இத் தொகையைக் கொண்டும், கமிட்டி மெம்பரில் ஒருவருடைய கடன் கொண்டும் ரூ. 1,400 க்கு ஒரு சிறு இடம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு தக்க சிறு வீடாவது கட்டிமுடிக்க குறைந்தது ரூ. 5,000 ஆவது வேண்டும்.

இக்கருத்துக்காக கத்தோலிக்குச் சகோதரர்கள் தங்கள் தங்களால் கூடிய தொகையை அடியிற்கண்ட விலாசத்துக்கு அனுப்பி இப்பொதுநலக்காரியத்துக்கு உதவி புரிவார்களென கோரப்படுகிறது.

	ரூ.	அ.	பை.
ஏற்கெனவே வரவேற்றுக் கொள்ளப்பட்ட தொகை	1,238	15	0
பந்தர் தெருவு சுருட்டு வியாபாரிகள் (டிசம்பர்மீ த்துக்கு) ...	30	0	0
ஆக மொத்தம்	1,268	15	0

Rev. Fr. L. X. FERNANDEZ,
North Georgetown,
Madras, E.

மனோகரன்.

இது பெங்களூர் C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை யவர்கள் எழுதிய ஓர் அருமையான தமிழ் நாவல். இதில் குடும்பவாழ்க்கையின் போக்கும், பத்தினி தன் பத்தாவினிடத்தில் நடந்துகொள்ளும் நெறிமுறையும், குடும்ப சுகஜீவியஞ் செய்யவேண்டுமாயின் அறவே நீக்கத்தக்க கொடிய மதுமான பழக்கக் கஷ்ட நஷ்டங்களும், இத்தீய பழக்கத்தால் கதாநாயகனுகிய, மனோகரன் அனுபவித்த ஆத்தும சரீர ஆபத்துகளும் இத்தீயப்பழக்க விலக்கினுல் அவனடைந்த பல நன்மைகளும், தெள்ளிய தமிழில் ஆடவர் பெண்டீர் சிறுவர் சிறுமியர் முதலிய அனைவரும் எளிதில் வாசிக்கத்தக்க சுலப நடையில் எழுதிச் சுத்தமாகப் பதிபிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டிக் குறைந்த விலை 4-அணு குறிக்கப்பட்டுளது. 4-அணு தபால் முத்திரை யனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்,

விலாசம்:— C. S. ஞானப்பிரகாசம் பிள்ளை,
தலைமை உபாத்தியாயர்,
பிளாக்பள்ளி பெங்களூர்.

1918-வருஷத்திய கியாலண்டர்.

12 பெரிய ஷீட்டுகளுடன் தமிழ் இங்கிலீஷ் தேதிகளுள்ளதாயும், சகல மதத்தாருடைய உற்சவங்களும், கிகப்பு கலரில் கவர்ண்மெண்ட் லீவு நாள்களும் etc., etc. அடங்கியுள்ளதுமான காலண்டர் 1-க்கு விலை அணா 5. டஜனாக வாங்குகிறவர்களுக்கு கமிஷன் கொடுக்கப்படும். அல்லது ¼-டஜனுக்கு குறையாமல் எங்களிடம் ஷர்ட் வாங்குகிறவர்களுக்கு 1 கியாலண்டர் இனாம் கொடுக்கப்படும்.

உயர்ந்த டுவில் ஷர்ட்டுகள்.

இவைகள் மிகவும் பெயர்பெற்ற தையல்காரர்களால் இங்கிலீஷ் மோஸ்திராவாய் நமது சுதேச நண்பர்கள் மனதுக்கு திருப்திகரமாய் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரே தடவையில் ஒரு டஜன் ஷர்ட் வாங்குகிறவர்களுக்கு 1 ஷர்ட் இனாம் ½-டஜனுக்கு வி.பி. சார்ஜ் இனாம்.

White Twill shirt Superior ...	1	8	0
Do Extra	1	12	0
Colour Twill shirts Superior ...	1	12	0
Do Extra	2	0	0
Kaki Twill shirt ordinary	1	14	0
Do Superior with flap, pockets on both sides	2	2	0

Apply sharp :—

RATNAM & Co.,
Ready made shirt makers,
இரக்ஷகர்புரம் பாலக்கரை,
திருச்சி.

குடியர்களை குணமாக்கும் அற்புத
"லிக்கோரின்." "Likkorin."

"லிக்கோரினை" எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபினி தின்போருக்கும் இரகசியமாகத் தெரியாமல் கொடுப்பதில் குடியையும் கள்ளையும் ஆயுளுள்ளளவும் விட்டுவிடுகிறார்கள். பரீட்சைக்கும் பயனுக்கும் உத்தரவாதம். நூற்றுக் கணக்கான நற்சாட்சிப் பத்திரம் பெற்றது. பத்தியமே கிடையாது. 25, 27, 30 வருஷ நெடுங்காலக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. யாதொரு கெடுதியும் செய்யாதது. 40-நாள் சாப்பிடக்கூடிய "லிக்கோரின்" புட்டி விலை ரூபா 3—0—0. தபால் கூலி முதலியவை அணா 5, பிரத்தியேகம்.

ஆங்கிலோ இன்டியன் டிரக்ஸ் கம்பெனி,
ஈரோடு, தென் இந்தியா.
Anglo Indian Drugs Co.,
Erode, South India.

GRAND VARIETY RAFFLE IN AID OF ST. ANNE'S ORPHANAGE.

RAFFLE RELIEF—RAFFLE OF THE POOR.

லாட்ரி விளம்பரம்.

சகோதரர்களே! 4 அணா கொடுத்து உங்கள் அதிர்ஷ்டத்தைப் பாருங்கள். இதுவே தக்க சமயம். தவறின் மறு சமயம் வாய்ப்பதரிது.

முந்துங்கள்! உடனே புஸ்தகங்களுக்காக தாமதமின்றி எழுதுங்கள்.

200-பிரைஸ்கள்.

முதல் பிரைஸ் (*First Prize*) *Rs. 1,000* ரூபாயிலிருந்து 5-ரூபாய் வரையில் 22 டிக்கட்டுகளடங்கிய புஸ்தகம் ரூபா 5. 1 புஸ்தகம் விற்பனை செய்கிறவர்களுக்கு 2 டிக்கட்டுகள் இனாம். 2 புஸ்தகம் விற்பனை செய்கிறவர்களுக்கு 4 பிரி டிக்கட்டும் 1 ஸ்பெஷல் டிக்கட்டும் கிடைக்கும்.

வேண்டியவர்கள் கீழ்கண்ட விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம் :—

ஜெ. ஏ. சாமி,
நெ. 242, ஓல்ட் பூர் அவுஸ் ரோட்,
பெங்களூர்.

Address :—

J. A. SAWMY,
No. 242, Old Poor House Road,
Bangalore.

லீலியும் ரோசாவும்.

ஆதி திருச்சபையில் அஞ்ஞான மார்க்கத்திலிருந்து மனம் திரும்பின இரு செல்வமாதுசிரோன்மணிகளைப்பற்றிய சரிதை. 417-பக்கங்கள் அடங்கியது இப்புஸ்தகம். இஃது திருச்சினாப்பள்ளி அர்ச். சூசையப்பர் கலாசாலையில் பேர்பெற்று காலஞ்சென்ற பிரான்ஸிஸ் பில்லியர்டு சுவாமியார் அவர்களுடைய ஞாபகத்துக்காக, அவர்களுடைய கிறீஸ்துவ மாணாக்கர்களில் ஒருவரால் எழுதப்பட்டது. புஸ்தகம் வேண்டுவோர் மதுரை செண்ட் மேரிஸ் ஸ்கூல் உபாத்தியாயர் மகா-ள-ள-ஸ்ரீ சூசை கோவிந்தராவுக்காவது அல்லது நல்லாயன் அச்சியந்திரச்சாலை மானேஜருக்காவது எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால்கூலி அன்னியில் இந்தியாவில் எந்த இடத்திற்கும் விலை 12 அணா. இதர நாடுகளுக்கு விலை ரூபாய் 1.

சூசை கோவிந்தராவ், ஏஜண்ட்,
மதுரை.

N. M. SAMI & Co.,

No. 44, Nomboolyar Street, Madras.

சாவதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்க்கு

100-ரூபாய் பரிசளிக்கப்படும்.

நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையில் இருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில பூனைனிதமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. நாள்பட வைப்பதால் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாக்காலி, செய்யான், பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் அடியோடு நீக்கக் கூடியது. எண்ணிறந்தோர் இதனால் சுகமடைந்தது பிரத்தியட்ச அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவில்லை. இது இரண்டு வித மருந்துகளடங்கியது. உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு ரூ. 0 8 0

ஷை தபாற்கூலி 0 3 0 டஜன் 1-க்கு ரூ. 5 0 0

ஏக காலத்தில் 2-பாக்கெட் வாங்கினால் தபாற்கூலி இனாம்.

வர்த்தகர்க்கு 100-க்கு 25-கமிஷன்.

சிவப்பிரகாச பல்பொடி

இந்தசிவப்பிரகாச பல்பொடி மற்ற இதர பல்பொடிகளைப்போலிராமல் அதிகசுகந்தமாயும் பல்வலி, பல்லில்சொத்தை, ஈர்வளர்ந்திருத்தல், வாய்ரணம், வாய்நாற்றம், பல்லாட்டம், முதலியவியாதிகளை சொஸ்தபடுத்துவதுமல்லாமல் பல் நன்றாய் துலங்கும்படிச் செய்யும். வாயிற்கு சதா கம கம வென்று பரிமளத்தைக் கொடுக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணா 2.

6-டப்பி விலை அணா 10.

வி. பி. தபாற்கூலி 1-முதல் 6-டப்பிவரை அணா 5.

கிருஷ்ணா சஞ்சீவி.

தலைநோய், பாரிசவாய்வு, சுளுக்கு, புண்கள், காயங்கள், வீக்கங்கள். கொப்பளங்கள் கட்டிகள், இருமல், மூச்சடைப்பு, தேள்கொட்டின விஷம் இவைகளுக்கு தேவதாப்பிரசாதம். நோய்கண்ட இடத்தில் இந்த கிருஷ்ண சஞ்சீவியை நன்றாய் இரண்டு மூன்று நிமிஷம் தேய்த்தால் உபாதை மாயமாக பறந்து ஓடிவிடும். இதற்கு சமமான மருந்து வேறே எதுவும் கிடையாது. இளங் குழந்தைகளுக்குக் காணும் சைத்திய நோய்களுக்கு உபயோகிக்கலாம். ஆயிரக்கணக்காகச் செலவழிந்துகொண்டு வருகிறது. ஒவ்வொரு க்ருஹத்திலும், பிரதிபிரயாணிகள் கையிலும் இந்த கிருஷ்ண சஞ்சீவி இருந்தே தீரவேண்டும்.

இதன் விலை புட்டி 1-க்கு அணா 8.

டஜன் 1-க்கு ரூபா 5—0—0.

கண் மருந்து.

கண்நோய், கண்குத்தல், கூசல், நீர்வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண்சிவப்பு, எரிச்சல், கண் இமைபுருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளை குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம். இதை உபயோகித்தால் கண்ணாடி போடவேண்டியதில்லை. புட்டி 1க்கு அணா 8.

எமது விலாசம்:— என். எம். சாமி அண்டு கம்பெனி,

நெ. 44, நம்புலையர் தெருவு, மதராஸ்.